ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு


| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 | |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 | |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 | |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஆவணி-மீ 20-உ (4—9—1932) | மலர் 19.



விற்பவணக்குத்தயார். முந்துங்கள். விற்பவணக்குத்தயார்.

## தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,
## அவர்கள் எழுதிய
# "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான மூகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0
தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்பில்லைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,
குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

## Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs. 8 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To

*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை வினியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வேலூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு:
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வனாதம், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ
செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொழும்பு.
சிவன் கோவில் மேற்குமடம்
பருத்தித்துறை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4! ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி
ராஜவீதி.

# சமதர்ம முரசு.

## சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்பாடுபடுவது ஏன்?

## நாயும், பன்றியும் நக்கும் எச்சிலையைப் பாய்ந்து பிடுங்கும் ஏழையின் கதி என்ன?

(தோழர் A. இரத்தினசபாபதி)

(4)

சென்ற கட்டுரைகளில் மனிதனின் இயற்கைப் 'பொது உடமை' களான அழகும், அதன் இன்பமும், சுத்தமான காற்றும் உலகமக்களுக்கெல்லாம் சுதந்தரமுடையதாயிருக்க நடைமுறையில் அவ்வாறு எனில்லையென்பதை விளக்கினோம். இனி இயற்கை நியதியின்படி மனிதனுக்குக் காற்றிற்கடுத்தபடியாக உயிர் வாழ்தற்கின்றியமையாதவை எவையெனில், அவை தண்ணீரும் உணவுமேயாகும்.

### தண்ணீரும், உணவம்.

மனிதன் காற்றைச்சுவாசிப்பதைத் தடைப்படுத்துவானேல் சிறிது நேரத்தில் அவன் சாவது திண்ணம். சாதாரணமாக இரண்டொரு நிமிடங்களுக்குமேலும், விசேஷப்பழக்கத்தின்மேலும் இன்னுஞ்சற்றுஅதிகநேரமும் காற்றில்லாமல் ஜீவிக்கலாம். அதற்கடுத்தபடியாக வேண்டியது தண்ணீரும் உணவுமேயாகும். 'தண்ணீர்' என்பதைப்பற்றி நாம் தனி அத்தியாயமாக விளக்கவேண்டியதில்லை. உணவுடன் சேர்த்தே அதனையும் விளக்கிவிடலாம். இன்னும் இரண்டொரு விஷயங்கள் மாத்திரம் அதைப்பொறுத்து கூறாது, மேலே செல்வது பொருத்தமுடையதாயில்லை.

சாதாரணமாக இந்தியாவில் நீர்வசதியதிகம் எனப்பொதுவாக கூறப்படினும் குடிப்பதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடையாத ஊர்கள் எத்தனையோ நம்நாட்டிலிருக்கின்றன, என்பதையாரும் மறுக்கமுடியாது. குடிக்கவே போதிய அளவு தண்ணீரில்லாத இடத்தில் குளிக்கவும், துணிதுவைக்கவும், மற்றவற்றிற்கும் போதிய தண்ணீர் கிடைக்குமென எப்படி எதிர்பார்க்க முடியும்?— ஆனால் இத்தகைய தண்ணீர் வசதியற்ற கிராமங்களிலுள்ளவர்களும், 'மனிதர்களே' என்பதையார் மறுக்க முடியும்? அவர்களும் மனிதர்கள்தான், சுத்தமான குடிதண்ணீரும் மற்றைய வசதிகளுக்கென தண்ணீரும் இவர்களுக்கும் வேண்டும். இது இயற்கை. ஏனெனில் இவர்களும் மனிதர்களே.

### ஆனால்

இந்த இயற்கையின் அவசியத்தின்படி மனிதனுக்கு வேண்டிய சுத்தமான குடிதண்ணீர் இம்மக்களுக்கு இன்று கிடைக்கிறதா என்பதுதான் நமது கேள்வி. எத்தனை கிராமங்களில் மக்கள் போதிய குடிதண்ணீரில்லாது தவிக்கிறார்கள்; எத்தனை கிராமங்களில் ஜனங்கள் சுண்ணாம்புப்பாறைத் தண்ணீரையருந்தி அதனால் நீர்க்கடுப்பு முதலான நோய்களுக்காளாகி அவஸ்தையடைகிறார்கள்; எத்தனை மக்கள் அறியாமையாலும், கிடையாமையாலும் செம்மண் தண்ணீரையும், பலவிதமான அசுத்தங்களுக்கும் உறைவிடமான தண்ணீரையும் குடித்து அதனால் காலரா, வாந்திபேதி முதலிய கொடிய நோய்களுக்காளாகி ஆவியிழக்கிறார்கள். உலகிலுள்ள எந்நாட்டையும்விட இவ்விந்தியாவில் வாந்திபேதியும் கொள்ளை நோயும் மலிந்திருப்பதை எந்த டாக்டர் மறுப்பார்? இந்த

### வாந்திபேதி,

வருவதற்குக்காரணம் ஜனங்கள் அசுத்த ஜலத்தைக்குடிப்பதும், அக்கெட்ட தண்ணீரிலுள்ள விஷக்கிருமிகள் அவர்களின் வயிற்றில் சென்று வாந்திபேதியை உண்டுபண்ணி நொடியில் கூட்டங்கூட்டமாய்மக்களைக் கொள்ளைகொள்ளுகிறதென்பதும் தற்கால வைத்திய உலகம் நன்கறிந்த உண்மையல்லவா? —ஆம் ஆனால் இந்நாட்டிலுள்ள 35 கோடி மக்களும் தீங்கற்ற சுத்த ஜலத்தை அருந்தும்படி செய்யவேண்டியது இம்மக்களைப்பராமரிக்கும் அரசாங்கத்தின் கடமையல்லவா? சாதாரணமாக நம் நாட்டில்

### செல்வவானும் ஏழையும்

வசிக்கும் ஓர் இடத்தை எடுத்துக்கொள்ளுவோமானால் செல்வவந்தன் சுத்தமான தண்ணீர் கிடைக்காத ஊரிலிருந்தாலுங்கூட அருகில்வேறு நல்ல தண்ணீரிருக்கும் இடத்திலிருந்து குழாய் மூலமாகவோ, கூலியாள் மூலமாகவோ தனக்கு வேண்டிய சுத்ததண்ணீரைத் தருவித்துக்கொள்ளுகிறான். ஆனால் ஏழையோ? இந்தியாவிலுள்ள மக்களில் பெரும்பகுதியினர் ஏழைகளேயென்பது உண்மை. இந்த கோடிக்கணக்கான ஏழைமக்களின் கதி என்னவென்று கேட்கிறோம். அவர்களுக்கு ஒரே குளமிருப்பதும் அதில்தான் அவர்கள் தங்கள் ஆடுமாடுகுளிப்பாட்டுவதும், குடிப்பாட்டுவதும், தாங்கள் துணிதுவைத்துக்குளிப்பதும், தாகத்திற்குக்குடிதண்ணீர் எடுத்துக்கொள்வதும் ஆகிய எல்லாவிதக்காரியங்களுக்கும் அதேதண்ணீரைத்தான் உபயோகிக்கிறார்கள். இவ்விதக்காரியங்களுக்கெல்லாம் உபயோகப்படுத்தப்படும் தண்ணீரில் விஷக்கிருமிகள் உண்டாவதும், அத்தண்ணீரை மனிதர் குடித்தவுடன் அக்கிருமிகளால் வாந்திபேதி உண்டாவதும் பலர் உயிரிழப்பதும் ஆச்சரியமா?

### நமது அரசாங்கத்தார்

இதனை அறியாதிருக்கிறார்களா? அறிந்தேதானிருக்கிறார்கள். வாந்திபேதியைத்தடுப்பதற்கென்று பல சுகாதாரமுறைகளைக் கண்டுபிடித்து அசுத்தத்தண்ணீரைக் காய்ச்சிக்குடிக்கவேண்டுமெனவும், காலரா சமயத்தில் பழைய உணவையும் அழுகிய பதார்த்தங்களையும், நன்றாய்ப்பழுக்காத பழங்களையும் ஜனங்கள் தின்னக்கூடாதெனவும் அறிக்கை வெளியிடுகிறார்கள். ஆனால் மக்களில் கிராமவாசிகளில் எத்தனைபேர் அசுத்த ஜலத்தைக்காய்ச்சிக்குடிக்கிறார்களென்று பார்த்தால் அந்தஜலந்தான் 'பூஜிய'மாக இருக்கிறது இந்தவிதமாக சாக்கடைத்தண்ணீரைக் காய்ச்சிக்குடிப்பதால் விஷக்கிருமிகள் செத்துப்போகும் என உபதேசம் செய்யும் அரசாங்கத்தார் மக்கள் எல்லோருக்கும் இன்றியமையாததான சுத்தத்தண்ணீர் கிடைக்கும்படியான வழிகளை என் கையாடக்கூடாதென்பதற்குக்காரணம்தெரியவில்லை. 'இந்தியாவிலுள்ள 35 கோடிஜனங்களுக்கும் சுத்தமானஜலம் கிடைக்கும்படி செய்வது சாத்தியமான வேலையா?' எனச்சிலர் கேட்கலாம். 'ஏன் சாத்தியப்படா'தென நாம் கேட்கிறோம். மனிதனுக்கு அவன் ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சுத்தமான தண்ணீர் தேவையென்பது இயற்கை நியதியாயிருக்கையில் தேசத்திலுள்ள ஜனங்களுக்கு அது கிடைக்கும்படி செய்வதைவிட அத்தேசத்தைப்பரிபாலிக்கும் அரசாங்கத்திற்கு வேறென்ன வேலை? என்று கேட்கிறோம். காரியம் என்னவோ பணச்செலவுள்ளதும் கஷ்டமானதும்தான் என்பதை நாமறியாமலில்லை. ஆனால் செலவையும் கஷ்டத்தையும் எண்ணி சுத்தத்தண்ணீர் அருந்தாமையால் மக்கள் சாகச்செய்வதா என்பதுதான் நமது கேள்வி.

மனிதனாகப்பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு ஸ்திரீக்கும் சுத்தமான குடிதண்ணீர் தேவை" என்பது இயற்கை நியதியாயிருக்குமேல் அது, அந்த சுத்தத்தண்ணீர் ஓர் அரசனுக்கும்வேண்டும் ஆண்டிக்கும் வேண்டும், ஏனெனில் அவ்விருவரும் அந்தஸ்தில் அரசனாயும் ஆண்டியாயுமிருந்தபோதிலும் அவ்விருவரும் 'மனிதர்' என்ற தலைப்பின்கீழ் வந்து விடுகின்றார்களல்லவா? இதைத்தவிர்த்து செல்வந்தன் எப்படியேனும் சுத்தமான தண்ணீரைப் பருகுவதும், ஏழை சாக்கடைத்தண்ணீரைக் குடித்து சாவதும் என்றால் இது இயற்கைக்கப்பாற்பட்ட திமிரின் செயலேயாகும் என கூறினால் இதனை மறுப்பவர்யார்? இது பிழைபடக்கூற்றாமோ?

### உணவு.

இனி உணவு விஷயத்தை எடுத்துக்கொள்ளுகிறோம். அன்பர்கள் இதனை நிதானமான தன்மையுடனும், ஆழ்ந்த ஆலோசனை புத்தியுடனும் பாரபக்ஷமற்றுப் படித்துணரவேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறோம்.

உலகில் மனிதஜென்மம் எடுத்துள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் உணவு இன்றியமையாததென்பது சிறுபாலகரும் நன்கறிந்த விஷயமாகும். இன்றைய உலகில் மக்கள் படும்பாடனைத்தும் தங்களது ஒரு சாண் வயிற்றை நிறப்பிக்கொள்ளும் பொருட்டேயன்றோ? வீடுவாசல் தோட்டம்துறவுகளை அடமானம் வைத்தோ, விற்பனை செய்தோ பணம் பெற்று அதனைக்கொண்டு கல்வி கற்பதும் பின்னர் உத்தியோகஸ்தலங்கள்தோறும் திரிந்து வேலை பெற முயற்சிப்பதும், எஜமானனுக்கு ஊழியனாயமர்ந்து சேவகம் புரிவதும்ஏன்? வேலை கிடையாது. பிச்சைக்காரராகக் கிளம்பி 'சங்கரசங்கர சம்போ' எனப் பாட்டுப்பாடி யாசகம் புரிவது என்? இன்னும் தனது உற்றார் பெற்றாரை விட்டு, மனைவி மக்களைத்துறந்து, வீடுவாசல்களை விட்டுக்கடல்கடந்து அயல் நாடு செல்வது ஏன்? ஆங்குள்ள தேயிலைத்தோட்டங்களிலும் ரப்பர்; காப்பித்தோட்டங்களிலும் இந்த ஏழை மக்கள் சென்றுபடாதபாடு படுவது ஏன்? 'பெரிய வியாபாரம் செய்யவேண்டும் பணக்கோட்டை கட்டவேண்டுமெனப்பாவிப்பது என்? பாராளுவதும் பாட்டிசைப்பதும் என்? எல்லாம் சாண்வயிற்றை நிரப்பும் நாழியரிசிக்காகவல்லவோ? 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க்கடல் கடந்தும், பாவித்தும் பாராண்டும், பாட்டிசைத்தும் போவிப்பம் பாழினுடம்பை நாழியரிசிக்கேநாம்' என்பது உலகறிந்த உண்மையல்லவா?

ஆம்! உலகில் இத்தகையபாடுபடுவதெல்லாம் வயிற்றைக்கழுவிக்கொள்ளத்தான்.

### இயற்கைநியதி.

இவ்விடம் இன்னுமொன்று கவனிக்க வேண்டிய தவசியமாகும். மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உணவு இன்றியமையாததென்பதை எவரும் அறிவர். ஒரு நாள் முழுவதும் உணவின்றியிருக்கலாம். கஷ்டத்துடன் இரண்டொரு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க,

# நாடக மேடைகள்.

## நாடு நலம் பெற அரங்கமேடை நடிப்பு—தரகு வேலைப் பிழைப்பு மாறவேண்டும்.

(கோவை ஆர். கிஸன்)

பேச்சாளர்களைவிட, எழுத்தாளர்களைவிட செயலுக்கு, நடிப்புக்கு மதிப்பதிகம்; விலைபதிகம் என்பது அனுபவம். சொற்சுவை, பொருட்சுவை ததும்ப, பிழைபடாது அணி அலங்காரங்களோடு சொன்மாரி பொழியலாம். பத்திகள்பல பலபடவரையலாம். செயலிலாற்றலரிது. எனவே செயலாற்றலுக்கு மதிப்பதிகப்படல் பொருத்தமுடைத்தேயன்றோ!

செயலாற்றலுக்கு அதிகப்படியான சிறப்பொன்றுமுண்டு. என்னையெனின், பேச்சும், எழுத்தும், கல்வியறிவும், உய்த்துணர் நுண்ணறிவும் படைத்தோர்க்கே எளிதில் நன்கு விளங்கும். பகுத்தறிவற்ற பல்லாயிரப்பாமரமக்கட்கு நன்கு விளங்காது. பிறர் நடத்தைகண்டு அந்நடத்தையின் பயன்கண்டு திருத்தம் அவர் உறுதல் இயல்பு.

எனவே அத்தகைய பாமரமக்கள், கல்வியறிவற்ற மக்கள் தங்கள் அறியாமையால் ஜனசமூகத்துக்கும் தமக்கும் இன்னல் விளைவிக்கக் கூடிய முறையில் ஒழுகும் பழக்க வழக்கங்களை நேர்மையற்ற, நீதியற்ற ஒழுக்கங்களைத்திருத்தி அவர்களை நேர்வழிச்செலுத்த அறிஞர்கள், மக்கள் நல்வாழ்வில் அன்பு செறிந்த ஆர்வம் கொண்ட சான்றோர்கள் முயன்றனர், முயன்றும் வருகின்றனர். தீய பழக்கவழக்கங்களாலும், அறியாமையாலும், அஜாக்கிரதையாலும் இத்தகைய பலவாலும் சேரும் தீமைகளையும். அவைநீத்து நேரிய முறையில் ஒழுக்கமாய், நாணயமாய், அறிவால் எதையும் ஆய்ந்து உறுதியுடன் நடந்துகொள்வதால் விளையும் நலன்களையும பாமரர் மனத்தும் பசுமரத்தாணியெனப்பதியும் முறையில் கற்பனைக்கதைகள் பல தொகுத்து, அவைகளை அக்கருத்துக்கொப்ப நடித்து, நேரிற்கண்டுங்கேட்டு முணர்ந்த அனைவரும் உண்மையுணர்வு பெற்று, உய்வழிநின்று நலம் பெறக் கண்டது நாடகமாகும். இக்கருத்துக்கொண்டே நாடகங்கள் நம் நாட்டிடை நடிக்கப்பட்டு வந்தன, வருகின்றன.

எனினும் நாடகமும் காலத்திற்கேற்ப, மக்களின் நாகரீக வளர்ச்சிக்கும், அதன் பயனும் உணர்ச்சிக்கு மேற்ப, மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. அங்ஙனமின்றேல் அக்கலை அழிந்தொழியுமென்பதிலும் ஐயமில்லை. காட்டுமிராண்டிக்காலத்து கோமாளிக்கு மதிப்புக்கொடுத்த தெருக்கூத்தையும், இன்றைய நவநாகரீக டிராமா ஸ்டேஜ்களையும் அவ்விரண்டின் நடைமுறை மாறுபாடுகளையும் ஒப்பிட்டுப்பார்ப்போர்க்கு நாம் சொல்லும் உண்மை விளங்காமற்போகாது. அஃதேபோன்று பிறப்பிலும், தொழில் முறையிலும் பேதங்கள், உயர்வு தாழ்வுகள் கண்டு பகுத்தறிவுக்கொவ்வாப் பழக்க வழக்கங்கள் நிறைந்த காலத்து நேரியவை அவையேயெனக்கருதி எழுதி 'மக்கள்பால்கொண்ட உள்ளன்பினால்' நடித்திருந்தாலும், பிறப்பிலும் தொழிலிலும் உயர்வு தாழ்வு பேணல் மனிதத்தன்மைக்கும், இயற்கையுணர்ச்சிக்கும், பகுத்தறிவுக்கும் புறம்பானவையெனக்கருதி அக்களைதெளியக்கலை வளர்ப்போர்க்கு அவை ஏற்காதல்லவா? பிராமணன் 'பிரம்மா' என்னும் படைப்புக்கடவுளின் முகத்திற்பிறந்தவன், அதனால் மற்றையோரைவிட உயர்ந்தவன் எனக் கூறும் பழங்கதைகள், 'கடவுள் உருவில்லான் எனக்கூறும்பொழுது முகமேது; இருப்பினும் ஆணுக்கு முகத்தில் குழந்தை பிறப்பதெவ்விதம்? உயர்ந்தவன் என்பதற்கு ஆதாரம் என்ன? அயோக்கியத்தனங்கள் அடுக்கடுக்காய், ஆயிரமாயிரமாய்ச்சலியாது செய்கிறானே? இஃதெப்படிப் பொருந்தும்' எனக்கேட்கும் இப்பகுத்தறிவுக்காலத்(Age of Reason) மக்களுக்கு எங்ஙனம் ஏற்கும்? பிராமணனல்லாத பிறர் வேதம் படித்தால் நாக்கையறுக்கவேண்டுமென்னும் நீதி புகட்டும் நாடகம் கல்வி அனைவர்க்கும் பொது என்னும் இக்காலத்துக்கு எங்ஙனம் பொருந்தும்?

எனவே காலத்திற்கேற்ப, இடத்துக்கேற்ப, மக்களின் நாகரீக வளர்ச்சிக்கும், உணர்ச்சிக்குமேற்ப அவர்கள் முன்னேற்றத்துக்கு வழிகோலும், நல்லறிவு புகட்டும் நாடகங்கள் பரவல்வேண்டும். அதற்கேற்ற நீதி செறிந்த நூல்கள் பலவெளிப்படவேண்டும். நடிப்புத்திறனால் வழுவறநடித்து மக்கள் வாழ்வைப்புனிதப்படுத்தவேண்டும். இன்றேல் அத்தகைய நேரியமுறையிலன்றி மக்களின் புனித நல்வாழ்வுக்கிடுக்கண் விளைக்கும் பழக்க வழக்கங்களைப்புகட்டும் துறையில் நாடகங்கள் நடிக்கப்பெறின், அதனால் நாடக நன்னோக்கம் பாழடையும். அவ்வாழ்வில் மக்களை யல்லற்படுத்தும். எனவே நாடக நோக்கமே பாழடையும்பொழுது, ஏழையுழைப்பாளியின் இரத்தஞ்சொட்டச்சேகரித்த பொருளைச்செலவு செய்து கவற்சியுடைய பல ஆடம்பர அலங்காரங்கள் செய்து நாடகம் நடிப்பதாற் பயனென்? அறிஞர்களே ஆலோசியுங்கள்; குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்பவனையுலகு எங்ஙனம் மதிக்கும்?

சிறந்த மக்களுக்கு நல்லொழுக்கம் புகட்டத்தோன்றிய நாடகமேடைகளின் இற்றைய நிலை என்ன? ஒழுக்கங்குலைக்கும் கொலைப்பீடமாய்த் திகழ்கின்றன என்று கூற என் அன்பார்ந்த வாசகர்களே! என் நெஞ்சு ஆத்திரங்கொண்டு அலறுகின்றது. அதுவே இன்றைய உண்மை நிலையென்றும் நாம் கருத ஆதாரமும் உண்டு. ஏதோ ஒரு சில நல்ல நடிகர்கள் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் முன் சொன்ன இழி நிலையிலேயே நாடகங்கள் இன்று நடிக்கப்படுகின்றன. முன்னர் எப்படி அன்பெனுமிறையை யிறைஞ்சியேற்கவும், ஐம்புலனொடுக்கி யுயர்வழி தேடவுமென்று கருதி யேற்படுத்தப்பட்ட கோவில்கள் இன்று அயோக்கியர்களின் காரியாலயமாகி, விபசார விடுதிகளாகி, உழைப்பார் உணவை இளைப்பாறியுண்ணும் வஞ்சகப்புரட்டர்களின் வாசஸ்தலங்களாய்த்திகழ்ந்து 'வைதிகத்தோழர் காந்தியவர்களாலுங்கூட 'குச்சுக்காரிகள் விடுதி' யெனக்கூறப்படுகிற நிலையெய்தியதோ, அதேபோல், மக்களின் நல்லொழுக்கத்திற்கு வழிகாட்டி நிற்கத்தோன்றிய நாடகமேடைகளிலும் அறிவற்றோர் கூட்டம், வஞ்சகக்குழாம் மலிந்து பொருளொன்றே குறியெனக்கொண்டு, ஒழுக்க சீலம் உதறித்தள்ளி, கட்டழகு மிக்க கன்னியர் பலரை நடிகையராயேற்று, காளையரைச்சேர்த்துக் காசுபெறும் தரகுத்தொழில் புரிந்து விபசாரத்தை வளர்க்கின்றார்கள். இதனால் ஏற்படும் கலகங்களுக்கும், கொலைகளுக்கும், கக்ஷிபிரதிகக்ஷிப்பகைகளுக்கும் ஓர் எல்லை இல்லை. இத்தகைய, ஒழுக்கங்கொலை செய்து விழுப்பமுடையித்தொழிலுக்கிழுக்குத்தேடும் காலிகள் ஒழிந்து கண்ணிய, திண்ணிய, நுண்ணிய, அறிவுடையார் அரங்கமேடைகளை வளம்படச்செய்தல் என்று! எனவே ஏங்குகின்றோம்.

இன்றைய நடிகர்களால் கொலை செய்யப்பட்டது ஒழுக்கம் ஒன்று மட்டுமல்ல, நாடக நடைமுறைகளும் கொலை செய்யப்பட்டுள்ளன, நாடக நோக்குக்கொப்ப நடையுடை பாவனைகளோடு நடிப்பதே நாடக முறையாகும். அம்முறையின்று அறவே புறக்கணிக்கப்பட்டு அரசவேடந்தாங்கி நடிக்குமொருவன் தனது நடிப்புக்கு நடிக்கும் நாடகத்திற்குச்சற்றும் பொருந்தாத சம்மந்தமணுவேனுமில்லாத 'தில்லாலே' பாட்டுக்களைப்பாடச்செய்வதும், அரசிவேடந்தாங்குபவள் பண்டைக்கால நாடகத்தை நடிக்கும்பொழுது அந்நிலைக்குச்சிறிதும் பொருந்தாது நேற்று வந்த 'காந்தி பாட்டு' பாடச்சொல்வதும் மிகவும் அசம்பாவிதமானவைகளாகும். இத்தகைய பொருத்தமற்ற போலி வேஷதாரிகளால்தான் இன்று நடிகருலகுக்கு மதிப்பு குன்றிவிட்டது.

சிலர்கேட்கலாம் மக்களுக்கு நல்லறிவு புகட்டும் நீதி செறிந்த பாக்களைப்பாடுவதால் குற்றமென்னென்று பாடலாம்; அதுவே மிகவும் முக்கியமும் பயன் தரத்தக்கதுமாகும். ஆயின் அவைகள் நடிகர்கள் ஓய்வுபெறும் இடைக்காலையில் தனியிடம் ஒதுக்கிப் பாடப்பெறல் வேண்டும். அதற்கும், நாடக நடிப்புக்கும் தொடர்பிருத்தல் கூடாது. நாடக நடிப்பில், ஒரு அங்கத்தில் நடிக்கவேண்டிய பகுதியில் பொருத்தமின்றிப்புகுதல் அடாது என்றே கூறுகின்றோம். அதுவும் பாட்டுப் பாடுவோர் அணிந்துள கோலத்துக்கு, வேஷத்துக்குப் பொருத்தமில்லாதன அவசியம் கைவிடப்படவேண்டும் என்றே உறுதியுடன் சாற்றுகின்றோம்.

இனி, இடைக்காலையில் பாடப்பெறும் பாட்டுகளும், நடிக்கப்பெறும் உபநடிகமும் மக்கள் முற்போக்குக்கு வழி கோலுபனவாயிருத்தல் வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். நமதடிமைத்தளைக்கு ஆக்கந்தேடி, உணர்ச்சியொடுக்கி, ஒற்றுமை குலைத்து, வேற்றுமை நாட்டும் சாதி, சமயப் புல்லுருவிகளுக்கும், மூடப்பழக்க வழக்கங்களுக்கும் ஆதரவு நல்கும் பாக்கள் தேனின் இனிய மதுரம் சொட்டச்சொட்டப்பாடினாலும், நடிகம் கண்கவர் வனப்பினதாயிருந்தாலும் அவற்றை அவசியம் ஒழிக்கவேண்டும். மக்களைச் செம்மை நல்வாழ்விற்குப் பண்படுத்து நந்நோக்கம் நாடகம் நடித்தல் என்னுமுறைமையுணர்ந்து கடைப்பிடித்தொழுக வேண்டும்.

இச்சமயத்தில் நாம் ஒன்று குறிப்பிட விரும்புகின்றோம். நாம் முற்கூறியபடி ஒழுக்கத்தவறுதலாக நடித்துப்பாமர மக்களை மயக்கி, தாமாதரிக்கும் பரத்தையர் பார்வையால் பகுத்தறிவற்ற பணக்காரரை வசியப்படுத்திப் பகற்கொள்ளையடித்து அச்செல்வாக்கால் வயிறு வளர்க்கும் அயோக்கியக் குழுவினர், மக்கள் அறிவு விளக்கம் பெற்றுச்சீர்திருந்திவிடின், அவர்கள் தலையில் மிளகாயரைக்கும் சந்தர்ப்பம் வாய்க்காதென்னும் காரணத்துக்காக, நாடகமேடை ஒழுங்குத்தவறி, மேடைகளில் சமூக சீர்திருத்தத்தில் ஆர்வமிக்குள்ள பெரியோர்களையும், பத்திரிகைகளையும், இயக்கங்களையும் தாக்கிப்பேசி, திரித்துக்கூறி, உண்மையை மறைத்து மக்களிடையே தப்பபிப்பிராயத்தைப் பரப்பவும் முயல்வது ஏமாற்றுக் குழுவினருக்கேற்ற தொழி

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# இந்தியர் தாழ்ந்தும் ஏனையோர் உயர்ந்தும் இருப்பதற்குக் காரணமென்ன?

# தெய்வ நம்பிக்கையே!

(செங்கோன் அறிவானந்தன்)

உலகத்தில் சிந்தனா சக்தியுள்ள மனிதவர்க்கங்கள் நிறைந்த, பல இடங்களிலும், சில பாங்கிலுள்ளோர் அறிவாளிகளாகவும். ஆண்மையாளர்களாகவும், செல்வவான்களாகவும், திடசாலிகளாகவும், ஆராய்ச்சிக்காரர்களாகவும், ஆளுந்தன்மையாளர்களாகவும், ஏனையசிலர் அறிவற்றவர்களாகவும், ஆண்மையற்றவர்களாகவும், ஏழைகளாகவும், ஆராய்ச்சி யற்றவர்களாகவும், ஆளப்படுவோர்களாகவும், இருப்பதற்குக் காரணம் என்னே!

உலகந் தோன்றுவதற்கு முன் எங்கணும் ஜலப்பிரவாகமாக விருந்து பிறகு சூரியவெப்பத்தினால் உண்டான சூட்டினால், ஜலங்குறையக் குறைய அதனால் உண்டான மண்மேடுகளே, இற்றைய உலகமென்றும், இம்மண்மேட்டிலுண்டான இரசாயனப்பொருள்களின் சேர்க்கையினால், புல், பூண்டு, செடி, கொடி, மரம், புழு, பூச்சி, ஊர்வன, நடப்பன, பறப்பன, இத்தியாதிகள் ஏற்பட்டு அவைகளிலிருந்து மனிதன் உண்டானதாகவும், அக்கால மனிதன் மிருகங்களோடுமிருகங்களாகவே இரண்டறக்கலந்து, பேதா பேதம் அச்சம், பயம் இல்லாமலே காட்டு மனித மிருகங்களாகவே இருந்து வந்ததாகவும், ஆதியில் தோன்றிய ஒரே ஒரு மணல்மேடு இடையில் ஏற்பட்ட பூமி வெடிப்பினால் பிளவுபட்டு, அதை சூழ்ந்து கொண்டிருந்த ஜலப்பிரளயம் குறுக்கே ஓடஆரம்பித்ததாகவும், அவ்வக்காலங்களில் பிளவுண்டான பாகங்களில் தங்கியமனிதனுள்பட எல்லாஜெந்துக்களும், இடையிலுள்ள நீரோட்டத்தைக் கடக்கச்சக்தியற்றவர்களாய், ஒருவரையொருவர் சந்திக்க முடியாமல் தத்தம் இடத்திலேயே இருந்து விட்டதாகவும், பல நூற்றாண்டுகளாக ஜலப்பிரவாகம் தங்குதடையின்றி ஓடிக்கொண்டிருப்பதினால் ஏற்பட்ட, நீர் வெட்டினால் உண்டான பிறந்த நீரோட்டமே இன்று ஆழியசமுத்திரமாகக் காணப்படுவதாகவும், இத்தகைய பிரிவினால் ஏற்பட்ட மணல்மேடுகளும் ஆண்டு வதிந்துவந்த ஏனைய ஜீவராசிகளுந்தான், இற்றைய நாடு நகரங்களாகவும், இந்தியர்களாகவும், இங்கிலீஷ் காரர்களாகவும் இன்னம் ஏனைய வகுப்புக்காரர்களாகவும், ஐந்து கண்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருப்பதாகச்சரித்திர ஆராய்ச்சியாளர் முடிவும், பகுத்தறிவுக்குப பொருந்துவன வாகவும் காணக்கிடக்கின்றன.

இத்தகைய ஒரே வகுப்புக்குட்பட்ட மனிதவர்க்கங்கள். பல்வேறு கொள்கையாளர்களாகவும், சிந்தனைக்காரர்களாகவும், உயர்ந்தும், தாழ்ந்தும் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஆதிகாலத்தில் உண்டாகிய மனிதன், காட்டு மிராண்டியாகவும், கண்டதைப்புசித்து, உடுத்த உடையின்றி மிருகங்களோடு மிருகங்களாகவே நெடுங்கால மிருந்து, பிறகு நாளடைவில் தங்கள் கூட்டம் அதிகரிக்கவே தாங்கள் மற்ற மிருகங்களுக்கு அதிகாரியாகவும், மேன்மை யாளராகவும் வரவேண்டுமென்ற எண்ணத்தினால் தூண்டப்பெற்றார்கள். (இக்காட்சியை இன்னும் மனிதன்முதல் மிருகம் ஜெந்துக்கள் ஈருகக்காணலாம்) இவ்வாறு தூண்டப்பெற்ற அக்கால, காட்டு மிராண்டிகள், மற்றைய மிருகங்களைப்போலிராது தங்கள் தங்களுக்கென சின்னஞ்சிறு குடில்களையும், உடம்பை மறைக்க இலையாலான ஆடைகளையும், கொள்ள ஆரம்பித்தார்கள். ஈண்டுதான் இவர்கள் மிருகத்திலிருந்து பிரிந்த ஆதிமனிதகாலம். இக்காலத்தில் தான் இரண்டறக்கலந்திருந்த மிருகங்கள் இவர்களின் நூதனச்செயல்களால் மருள ஆரம்பித்தன. பிறகு இவர்களைக்கண்டு பயந்தோடவும் தலைப்பட்டன. இவ்வாறு மாற்றமடைந்த நம்முன்னோர்களாகிய காட்டு மிராண்டிகள், தங்கள் ஆகாரத்திற்கென மிருகங்களை வேட்டையாடுவதற்கு, வலைகளையும், ஈட்டிகளையும், வில், அம்புகளையும் செய்து கொண்டார்கள். இவ்வாறே படிப்படியாக தங்களால் வதைக்கப்பெற்ற மிருகங்களைப்பதம் செய்து உண்பதற்கு வேண்டிய பண்டபாத்திரங்களையும் கண்டு பிடித்தார்கள்.

இவ்வாறு மேலும் மேலும் மனித தற்கால உலகத்துக்கு வந்து கொண்டிருக்குங்காலத்தில் தான் உலகம் பலவிதபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு பாகங்களிலும் தன்னந்தனியாகப் பிரிக்கப்பட்ட மனிதன், இக்காலத்தைப் போன்று கப்பல் போக்குவரத்து, தந்தி தபால் சாதனங்கள் அக்காலத்திலில்லாததினால், அவரவர்களிருக்கும் இடத்திலேயே தத்தமக்கு வேண்டிய பாதுகாப்புகளைத் தேடிக்கொண்டு வசித்துவந்தார்கள். அக்காலத்திலிருந்த மனிதர்களுக்கு, "கடவுள்" என்ற ஒரு கற்பனையோ, அல்லது எண்ணமோ, படமோ, வழிபாடோ, கிடையாது. தத்தமக்குவேண்டிய காரியங்களைத் தாமாகவே செய்துகொண்டு வந்தார்கள்.

இவ்வாறு நாள் பலசெல்லச் செல்ல இக்காலத்தோர் கூறும், ஆசியாக் கண்டமாகிய ஒரு பாகத்திலுள்ள நமது முன்னோர்கள், தாங்கள் மிருகத்தினிடத்தே யிருந்து பிரிந்து தனிக்கூட்டமாக வாழ்ந்து, தங்களுக்கு வேண்டிய குடில்களையும், பண்டபாத்திரங்களையும், தோலாடைகளையும், வில், அம்பு, ஆயுதங்களையும், இன்னும் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களை, அக்காலத்தவர்கள் நூதனமாகவும், ஆச்சரியமாகவும் எண்ணுமாறு கண்டு கையாண்டு வந்தார்கள்.

இத்தகைய நூதன முன்னேற்ற முறையில் அவர்கள் நடப்பதற்கு காரணம் அவர்களுக்குமேல் கண்ணுக்குத்தெரியாததொரு "சக்தி" இருப்பதாகவும், அதன் துணைகொண்டே தாங்கள் இவ்வாறு முன்னேறி வந்ததாகவும், அச் "சக்தி" தான் எல்லாக்காரியங்களையும் நடத்திவைக்கின்றன வென்றும், அவ்வஸ்துக்கு தாங்கள் பயப்பட வேண்டுமென்றும் வந்தனை வழிபாடுகள் செய்யவேண்டுமென்றும், அதற்கென ஒரு மரக்கட்டையையோ, அல்லது மண்ணாங்கட்டியையோ, ஏற்படுத்தி. அவ்வுருவத்துக்கு காளி, காட்டேரி, காத்தவராயன் என்று பெயர் கூறி வணங்கத்தலைப்பட்டார்கள். அக்காலத்தில் அவர்கள் கொண்ட அச் "சக்தி" தான் இன்று முருகனாகவும், இராமனாகவும், இன்னம் ஏனைய எண்ணற்ற தெய்வங்களாகவும் நம்மிடையில் தோன்றுகின்றன. இவ்வாறு முன்னேறிவந்த நமது முன்னோர்கள் இடையே எண்ணிக்கொண்ட ஓர் எண்ணத்தால், எல்லாம் அதன்செயல், எல்லாம் அதன் ஆனை என்னும் சோம்பேரிக்கோட்டையைப் பக்க வாய்கட்டி, மேலும் மேலும் முன்னேறும் வழிகாணாமல் இற்றைய சீர் கேடான, மானங்கெட்ட நிலைமைக்கு வரவேண்டியதாயிற்று.

இன்னொரு (இக்காலத்தில் ஐரோப்பாகண்டம், அமெரிக்கா கண்டம் என்று சொல்லக்கூடிய) பாகத்திலுள்ளவர்களோ, தன்னம்பிக்கையோடு, எல்லாம் நமது செயல், எதையும் நாம் செய்யலாம், என்று படிப்படியாக அவரவர்கள் முன்னேற்றத்துக்கு வேண்டிய எல்லாவித ஆராய்ச்சிகளையும் செய்து, அதன்பயனாக குடிசையிலிருந்து மாடமாளிகையும், தோலாடையிலிருந்து பட்டுப்பட்டாடையும், மண்பாண்டத்திலிருந்து பொன் வெள்ளிப் பாத்திரத்தையும் ஈட்டி அம்பிலிருந்து எண்ணற்ற மயில்கள் போர் செய்யக்கூடிய பீரங்கி துப்பாக்கியையும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் சென்று தங்கள் விதவிதமான வியாபாரங்களை நிலைநாட்டி, ஆதலால் பொருள்தேடுவதற்கு கப்பல்களையும், விமானங்களையும், தந்தி, தபால் சாதனங்களையும் கண்டு பிடித்து இன்னம் எண்ணற்ற நூதனங்களை அறிவதற்கும் ஆராய்ச்சிசெய்து கொண்டு வருகின்றார்கள். இவர்கள் தங்கள் காரியத்துக்கு தெய்வ உதவியையோ, சக்தியின் துணையையோ, இன்னம் ஏனைய குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்திருப்பார்களேயாயின், நம்மினும் கீழாகத்தான் இன்று இருப்பார்கள்.

இத்தகைய குருட்டு (தெய்வ) நம்பிக்கையையே, இன்னமும் விடாது எல்லாம் அவன்செயல், நம்மாலாவதொன்றுமில்லை என்று சோம்பேரி ஞாயம் பேசிக்கொண்டிருந்தால், இற்றைய நிலைமையினுங் கீழாகத்தான் நாம்வர நேரிடும். உதாரணமாக நமது ஆசியாக்கண்டத்திலுள்ள, சைனா சப்பான், சையாம் இண்டோசைனா இந்த தேசங்களைப்பாருங்கள் செப்பான் மாத்திரம் சமீபத்தில் தன்னம்பிக்கையில் கண்விழித்து நடந்ததினால்தான், சிறிது தலைநிமிர நேர்ந்திருக்கிறது. ஏனைய தேசங்களோ ஒன்றுக்கொன்று தெய்வ நம்பிக்கையில் நான் முன் நான் முன் என்று தான் பந்தயம் போடுகின்றன. இந்த தேசங்களும் அதன்மக்களும் மானமிழந்து, வலிமையிழந்து, தாழ்மையுற்று, தரித்திர நாடாகவும், அடிமை நாடாகவுந்தான் கிடக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் தெய்வத்தை எதிர்பார்க்காத மற்றைய மேல் நாடுகளோ, இந்திரலோக பதவி பெற்று ஏகபோக சுகமாக அரசுபுரிந்து வருகின்றன.

ஆனால் மேல் நாட்டிலுள்ளோர் கடவுள் நம்பிக்கையில்லையா என வினவலாம். அதையும் சற்று ஆராய்வோம். மேல் நாட்டுள்ளோருக்கும், நம்மனோருக்கும் கடவுள் நம்பிக்கையில், அனந்தங்கோடி வித்தியாசங்கள் உள்ளன. அன்னார் நம்மைப்போன்று எதையும் கடவுள் செயல் "அவனன்றி அணுவசையாது" என்னும் சோம்பேரி ஞாயத்திலீடுபட்டவர்களல்ல. உண்பதற்கும், உடுப்பதற்கும், படுப்பதற்கும், பார்ப்பதற்கும், எடுத்ததற்கெல்லாம் ஈசன் செயலென்று நினைப்பதே கிடையாது. மேல் நாட்டார் தன்மனச்சாந்திக்காக கடவுளை எண்ணுகிறார்களே யொழிய, நம்மை போன்று பட்டம் பெறுவதற்கும்- பாவத்தைப்போக்கிக்கொள்வதற்கும் வியாபாரத்தில் வருவாய் பெறுவதற்கும்-வியாபாரத்தில் ஜெயம் பெறுவதற்கும், நல்லமழை பெய்ய வேண்டுமென்பதற்கும் நஞ்சை புஞ்சைவிளையவேண்டுமென்பதற்கும், இவ்வாறு எடுத்ததற்கெல்லாம் கடவுள், கடவுளென்று, கடவுள் துணையையே எதிர்பார்த்து, ஏமாறுவது கிடையாது. நம் நாட்டிலோபுற்கட்டு விற்பவன்முதல், புவியையாள்பவன்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# புத்திர பாக்கியம்.

## பிள்ளைப்பேற்றுக்களவில்லையா?

(திருமங்கலம்—மணிமாறன்)

கலியாணம் செய்து கொள்ளுவது பிள்ளைப் பெறுவதற்காகத்தான் என்று எண்ணும்படியான நிலைமைக்கு நமது மக்களைப் 'பிள்ளைப் பைத்தியம்' பீடித்திருக்கிறது. இதற்குக் காரணம் பிள்ளை பெறுவதை மதத்தோடு பிணைத்து வைத்திருப்பதுவும், கடவுள் பார்த்துக் கொடுக்கும் பாக்கியமே புத்திர பாக்கியம் என்னும் எண்ணமும், புண்ணியவான்களுக்கும், முன் ஜென்மத்தில் நற்கருமம் செய்தவர்களுக்குமே புத்திர பாக்கியம் கிட்டு மென்னும் குருட்டு நம்பிக்கையுமே யாகும். பிள்ளையில்லாதவர்களுக்கு "புத்" என்ற நரகவாசம் கிடைக்கு மென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிள்ளையில்லாதவர்கள் எத்தனை பேர்கள் அந்த 'புத்' என்ற நரகத்திற்குப் போய் திரும்பிவந்து சொன்னார்களோ தெரியவில்லை. நரகம் என்ற ஒரு கற்பனை உலகை (Idealised World) சிருஷ்டித்து பிள்ளை யற்றோர் அவ்வுலகில் போய் அவதியுற வேண்டும் என்று யாரோ ஒருவன் எழுதிவைத்து விட்டதை நம்பி, மக்கள் அந்நரகத்தண்டனையினின்றும் மீளுதற்காக "பிள்ளைவரம்" வாங்க காசி ராமேஸ்வரயாத்திரை சென்று அலைவதோடு, புழுபாசி பிடித்த தண்ணீரிலும் 'புண்ணிய தீர்த்தம்' என விழுந்து தொத்து நோய்களுக்குள்ளாகிக் கெடுகின்றனர். சிலர் மந்திரவாதிகளிடத்தே (Nicromancer) அகப்பட்டுப்பணத்தை இழப்பதோடு மட்டுமின்றி, பெண்களின் மானத்தையும் இழக்கும்படி செய்து விடுகின்றனர். அந்தோ! அப்பிள்ளைப்பைத்தியத்தால் எத்தனை பெண்கள் தற்கொலையும் செய்துள்ளார். பிள்ளையில்லா 'மலடி' என்று பலர் இழிவு படுத்தி ஏசுவதாலும், பிள்ளையில்லாத காரணத்தால் கணவன் மறு பெண்ணை மணந்து கொண்ட காரணத்தாலும் பலபெண்கள் தற்கொலை செய்துகொள்வது அடிக்கொருதடவை நாம் கேள்வியுறும் செய்தியாகும்.

மற்ற நாட்டினர்களெல்லாம், பிள்ளை பெறுதலைக் கட்டுப்படுத்தி அதாவது கர்ப்பத்தடையால் (Birth Control) பிள்ளை அளவுக்கு மீறி பெறாதபடி செய்து கொள்ளுகின்றனர். எக்காரணத்தாலெனின் அளவுக்கு மீறிக்குழந்தைகளைப் பெற்று பின்னால் அவைகளைக் காப்பாற்ற சக்தியற்று அவதிப்படாமலிருப்பதற்கும், வருடம் தவறாது பிள்ளை பெற்றுத் தாய் உடல் நலிந்து கஷ்டப்படாதபடியும் முன்னெச்சரிக்கையாக கர்ப்பத்தடை செய்துகொள்ளுகின்றனர்.

ஆனால் நம் நாட்டிலோ அவ்வழக்கம் அணுவும் கிடையா. பிள்ளை உற்பத்தியே கடவுள் அருளால் நடைபெறும் காரியமென வாளாவிருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் இத்தனை பிள்ளைகள் பிறக்குமென அவரவர்கள் தலையில் முன்னாலேயே 'பிரமன்' எழுதிவிடுவான் எனவும் உள்ளங்கையிலுள்ள 'ரேகை'யில் கூட அவர்கள் எத்தனை பிள்ளை பெறுவார்கள் என்று தெரியமென்றும் நம்பிக்கொண்டு கணக்கற்ற பிள்ளைகளைப்பெற்று, தாய் எலும்புக்கூடாக மாறி வெகு விரைவில் 'மோக்ஷலோகம்' செல்ல (மறணமடைய) தயாராகி விடுகின்றனர்.

நமது நாட்டில் விதவைமுறை (widow system) இருப்பதால் பல்லாயிரக்கணக்கான பெண்கள், பக்குவமடைந்த இளம் வயதுடைய பெண்கள், புருடனிறந்துவிட்டமையால், விதவைகளாய் வீட்டு மூலை காத்துக்கிடக்கின்றனர். இப்படியாக பலவாயிரம் பெண்கள் பிள்ளை பெறமுடியாதவர்களாய் மூலையில் இருக்கும்போதே நம் இந்தியாவின் ஜனகணிதம் (Census) வருடத்திற்கு வருடம் கூடிக்கொண்டே வருகிறது. விதவை முறையும் ஒழிந்து அவர்களும் மறுமணம் புரிய முற்பட்டு பிள்ளைபெற ஆரம்பித்துவிடின் அப்பப்பா! இந்தியா சிலவாண்டில் ஜனப்பெருக்கமிகுதியால் பெரும் பஞ்சத்துக்குள்ளாகி பரிதவிக்கும் என்பது உறுதி! உறுதி!!

இது சொல்லுவதால், விதவைகள் மறுமணம் செய்தல் கூடாது என்று நாம் எண்ணுவதாக யாரும் நினைத்துவிடவேண்டாம். விதவை முறை ஒழிந்து அவர்களும் மறுமணம் புரிந்து மக்களைப்பெறவேண்டுமென்பதுதான் நமது அவாவாகும். ஆனால் யாவரும் பிள்ளை பெறுவதில் 'மிதவாதி' யாயிருந்து அளவுக்கு மீறிப் பிள்ளை பெறாதபடி 'கர்ப்பத்தடை' செய்து வாழ்வதே நமக்கும் நாட்டுக்கும் நலம் என்பதே நமது அபிப்பிராயமாகும்.

தவிரவும் மற்றைய நாடுகளைவிட நமதுநாட்டில்தான் தொத்து நோய்களின் (Contagious diseases) கொடுமையால் 'சிசுமரணம்' அளவுக்கு மீறி நடைபெறுகின்றது. சிசுமரணத்திற்கு முதற்பரிசு வாங்குவதற்கு நமது நாடே தகுதியுடையதாகும். பிரபல வைத்திய நிபுணர்களும் நமது நாட்டைப்போன்று 'சிசுமரணம்' என்னாட்டிலும் கிடையாதெனவே சொல்லுகின்றனர்.

இப்படியாகப்பல கோடி சிசுக்கள் சிறு வயதிலேயே மடிந்தும் ஜன கணிதம் தடைக்கு பலகோடி உயர்ந்து கொண்டே வருவதைக்காண நமது நாட்டில் பிள்ளை பெறுதலுக்குக் கணக்குமில்லை, வழக்குமில்லை என்று தெரிகிறதன்றோ? இன்னும் எத்தனையோ விதவைகள் பிள்ளை பெற்றுக்கற்றாழை, கிணறு, குப்பைத்தொட்டி, சாக்கடை முதலியவைகளிலும் எறிந்துவிடும் செய்திகளையும், அடிக்கடி கேள்விப்படுகிறோம். அந்தோ! இத்தகைய அகால மரணங்களாலும் (Premature Deaths) நீதியற்ற விதவை முறையாலும் நம் இந்தியாவின் ஜனகணித எண்ணிக்கையைக் குறைக்க முடியவில்லை.

ஒரு வனுக்தக்கலியாணம் நடைபெறுகிறது அதுபோது பல பெரியோர்கள் விஜயம் செய்கின்றனர். மணமக்களை ஆசீர்வாதம் செய்கின்றனர். "சுகஜீவியாக வாழ்க" என்றோ, "பகுத்தறிவோடு வாழ்க" என்றோ 'இருவரும் இணைபிரியாது வாழ்க' என்றோ ஆசீர்வதிக் கின்றனரா? இல்லை! இல்லை!! "கணக்கற்ற குழந்தை குட்டிகளைப்பெற்று வாழ்வாயாக" என்றே வாழ்த்து கின்றனர். பிள்ளை மோகத்தைப்பார்த்தீர்களா? கலியாணம் முடிந்த மறுவருடத்திலேயே மணமகள் தாயாகி விட்டால் தான் அவளுக்கு மரியாதையுண்டு. இல்லையாயின் 'மலடி' யென ஏசப்படுவாள். மணமகனும் கூட என்ன எண்ணுகிறான். வருடங்களாகியும் பிள்ளை பிறக்காவிடின், அவ்வியந்திரம் சரியானதல்ல என நினைந்து இன்னொரு யந்திரம் கொள்ள (மறுமணம்செய்ய) முயற்சிக்கிறான். பெண்களைப் பிள்ளைபெறும் யந்திரமாகவும், சமைபல் செய்யும் 'குக்கர்' களாகவுமே ஆண்கள் கருதுகின்றனர்.

பிள்ளைப் பைத்தியத்தை மக்களுக்கு உண்டாக்குவதற்கு பலர் பல பாக்களும் தொகுத்துச் சென்றனர். "குழலினிது யாழினிது என்பர், மக்கள் தன்மழலைச் சொற்கேளாதவர்" என்று ஒரு பெரியார் பாடிவிட்டார். குழந்தைகளுடைய மழலைச்சொற்கள் (தெளிவற்ற வார்த்தைகள்) புல்லாங்குழலின் சப்தத்திலும் யாழின் இன்னிசையிலும் சிறந்தவையாம்! இவ்வெண்ண மெல்லாம் 'பிள்ளைப்பைத்திய' த்தால் தான் எழுமென அறிக!

பிள்ளைப்பைத்தியத்தால் சின்னாட்களுக்கு முன்பு திருப்பாலைக்குடி 'மஸ்தானி' டம் ஓடினர்: பிள்ளை பெற முடியாமையின் காறணத்தை அறிவதற்கு உடல் கூறுதெரிந்த வைத்திய சாஸ்திர நிபுணரிடம் சென்று கேட்டால் உண்மை தெரியும். தக்க ஒளடதம் கொண்டோ அன்றி சிகிச்சை பலசெய்தோ பிள்ளைபெறலாம். திருப்பாலைக்குடி மஸ்தான் கொடுக்கும் தண்ணீரைப்பருகியவுடன் அல்லது அவர்சொல்லும் மந்திரத்தால் (வெறும் சொற்கள்) பிள்ளைஉற்பத்தி உண்டாகிவிடும் என்று நம்பும் மக்களை அறிவுள்ள மக்கள் என்று எண்ண முடியுமா? ஒருசில மந்திரத்தாலும், தண்ணீராலும் பிள்ளைகொடுப்பேன் என்று சொல்லும் 'மஸ்தான்களை' 'மந்திரவாதிகளை' 'கோடாங்கிகளை' 'குறிகாரர்களை' 'பூசாரிகளை' பைத்தியம் தீர்க்கும் வைத்தியசாலைக்கு (Lunatic Asylam) அனுப்பிவைக்க வேண்டியது அரசாங்கத்தாரின் கடமையாகும். என்ன செய்வது? நமது அரசாங்கம் 'மதநடுநிலை' அரசாங்கமன்றோ?

இப்படியாக மக்கள் பிள்ளைப்பைத்தியம் கொண்டு மஸ்தான்களிடத்தும், பூசாரி, கோடாங்கி, மந்திரவாதிகளிடத்து மகப்பட்டு, பலவந்தத்தாலும், சூழ்ச்சியாலும் பலபெண்கள் கெடுக்கப்பட்ட செய்திகளும் நாம் பல முறை கேள்விப்படுகிறோம்.

அளவுக்கு மீறிக்குழந்தைகள் பெற்று காப்பாற்ற சக்தியற்றுத்திண்டாடுவதினாலன்றோ நமது நாட்டில் பல மக்கள் கப்பலேறி சோம்பேரிக்கூட்டங்களுண்டாகி காவியுடைகட்டி 'கஞ்சா' புகையால் வெருண்டு 'மிளகாய்ச்சாமி'களாயும் குருமார்கள், ஆசாரிமார்களாயும், 'குருபூஜை' 'கும்பாபிஷேகம்' தேடியலையவேண்டியிருக்கிறது. வேலை கிடைக்காமல் வயிற்றின் கொடுமையால் மறியல், தபால் பெட்டியில் தீயிடல், ரயிலை நிறுத்தல் முதலியன செய்து ஜெயில் சென்று வயிர் நிரப்பவேண்டியிருக்கிறது, வறுமை பெறுகி கொலை, கொள்ளை, சூது மலிந்து நாடும் கேடுறுகின்றது.

எனவே 'புத்' என்ற கற்பனை உலகிற்கு அஞ்சியோ அல்லது 'கடவுள் அருள்' என்று மயங்கியோ அல்லது 'தலைவிதி' என்று எண்ணியோ கணக்கற்ற பிள்ளைகளைப்பெற்று தானும் வதங்கி நாட்டையும் கெடுத்துவிடாமல் யாவரும் பிள்ளை பெறுவதில் 'மிதவாதி' யாக இருந்து நல்வாழ்வு வாழவேண்டுகிறோம்.

---

## வில்லிசேரி.

---

கோவில்பட்டி தாலூகா வில்லிசேரி செந்தமிழ்க்கலா நிலயத்தின் ஆதரவில் 27-8-32 மாலை 7 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப் பெற்றது. கூட்டத்திற்கு கிராமப்பிரமுகர்களும், கிராம வாசிகளுமாக ஏராளமாக கூடியிருந்தனர். ஷை கலா நிலைய ஆசிரியர் தோழர் டி. கோவிந்தராஜலு அவர்கள் மக்களும், மதமும் என்பது பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினார் அங்கு கூடியிருந்த கிராம வாசிகள் யாவரும் சுயமரியாதைக் கொள்கைகளைப் போற்றிப் புகழ்ந்து பேசினார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

# (Scientific Method and Ignorant Beliefs.)

## மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்னை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(7)

முன் அத்தியாயங்களில் மூடநம்பிக்கைகளில் சிலவற்றை மெஞ்ஞான முறைப்படி விசாரித்து வந்ததில் அவை இரண்டு காரணங்களால் உண்டாயிருக்கவேண்டுமென அறிந்தோம். அவை யாவன, வெறும் பழக்க வார்த்தைகளைக்கொண்டே பல மூடநம்பிக்கைகள் நிலைத்து வருகின்றன. இரண்டாவது ஏகதேச சந்தர்ப்பங்களிலிருந்து மூடநம்பிக்கைகள் பிறந்திருக்கவேண்டுமெனவும் தெரிந்துகொண்டோம். சிலமூட நம்பிக்கைகளுக்கு நமது ஆசையே (Our wish) காரணமாய் இருக்கலாமெனவும் தெரிந்தது. இந்த காரணமொன்றே பல பொய் நம்பிக்கைகளின் மேல் வைத்துள்ள விஸ்வாசத்திற்கு ஆதாரமென அறிதல் வேண்டும். நமது ஆசையின்படியே விஷயங்கள் நமக்கு அனுகூலமாக வேண்டுமென்ற மனப்பான்மை பெரும்பாலோருக்குவுண்டு. இந்த மனப்பான்மையாலேயே ஜோசியத்தின் மேலும், ஜாதகத்திலேயும், குறிசொல்லும் விஷயங்களிலேயும், கைபார்ப்பதிலேயும், மைபோட்டு பார்ப்பதிலேயும் நம்மவர்களில் பலருக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. கஷ்டப்படாமலே நமக்கு செல்வம்வாராதா? நாம் முயற்சி செய்யாமலே நம்மை விட்டுப்பிரிந்தவர்கள் திரும்பிவரமாட்டார்களா? உழைப்பின்றி சம்பத்தும் செல்வமும், கீர்த்தியும் வாராதா? என்ற நோக்கங்கள் நமது மனதில் அடுத்து அடுத்து எழுவதால் ஆருடம் என்ன தெரிவிக்கின்றது, குறிசொல்லுகிறவன் நமக்கு என்ன ஆதாரமளிக்கின்றான்? கைரேகை என்ன குறிக்கின்றது, என்று அவாக்கொண்டு இந்த மோச வார்த்தைகளின் மேல் நம்பிக்கை வைக்கின்றோம்.

குறிசொல்லும் விஷயங்களில் நமது பாமர ஜனங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நமக்கு பல குறைகள் நேரிடுகின்றன. இந்தக்குறைகளை நீக்கிக்கொள்ள ஆசை மென்மேலும் உண்டாவது சகஜம். இந்த ஆசையால் குறிசொல்லுகின்றவன் சொல்லை நம்ப நேரிடுகின்றது. அவன் சொல்லுவது மெய்யோ பொய்யோ நம்முடைய கோரிக்கைப்படி நிறைவேறும் என்று அவன் சொல்லுகின்றபடியால் அவன் சொல்லின் மேல் நம்பிக்கை ஏற்படுகிறது. குறி சொல்வார் யார் என்று பார்ப்போம்.

குறிமேடையில் குறிசொல்லுகிறவர்களில் பலர் நரம்பு வியாதியில் (Nervous Disordes) பாதிக்கப்பட்டுள்ளார். அவர்கள் எளிதில் கோபம், சந்தோஷம் அடைவார்கள் (Easily Excited) இவர்களுடைய ஆடம்பரங்கள் பாமர ஜனங்களின் மனதை உருகச்செய்துவிடுகின்றன. உடுக்கை சிலம்பு முதலிய வாத்தியங்கள் குறிகேட்க வந்திருப்போரை ஓர்வித மயக்கமுண்டாக்கக் கூடியதாக இருக்கின்றன. குறி சொல்லும் இடங்களில் மதுரை வீரன் படமும், அதில் குதிரைசவாரி நாய்களுடன் செய்வதாக வரையப்பட்டு, தொங்க விட்டிருக்கும், குறி சொல்பவனும் பகல்வேஷத்திற்குரிய திருநீர், குங்குமம் திரேகமுழுமையும் பூசிக்கொண்டு கழுத்தில் பொன் உத்திராக்கம், கைகளில் பொன் தோடா, பட்டாடை முதலிய வஸ்திரங்களை அணிந்து, உடுக்கை சிலம்புடன் அவன் இஷ்டதேவதையை வசியமாக்க முயற்சிசெய்வான். இந்த வேஷங்களைக்கண்டோர் மயங்கி விடுகின்றார்கள். இவர்கள் மயக்கத்தை அதிகரிக்க, உடுக்கையையும், சிலம்பையும் உறத்து தட்ட ஆரம்பிப்பான். அவனுக்கு ஆவேசமும்வருவதாகநடிப்பான் இந்த ஆவேசத்திற்கு வேண்டிய மதுபானமும் அருந்துவதோடு புட்டியிலும் சாராயம் மதுரை வீரனுக்காக படையல் போட்டிருக்கும். வேலை ஒன்றுமில்லாத வீணர்கள் அந்த குறிமேடைகளில் சென்று பக்திவான்களைப் போல் நடிப்பார்கள். இந்த சூதை அறியாத பெண்கள் தங்கள் குறைகளை தெரிவிப்பார்கள். இவைகளை ஏதோ அலட்சியமாகக்கேட்டு அதற்கு ஏதோ ஓர் பரிகாரத்தை தெரிவிப்பான். இந்தப்பித்தலாட்டங்களுக்கு எமாந்து கையிலிருக்கும் பணத்தையோ, நகையையோ, தட்சிணையாகக் கொடுப்பார்கள். இந்த விதமாக அந்தப்பெண்கள் மதிமோசம் போவார்கள்.

முக்கியமாக ஸ்திரீகள் பிள்ளைவரம் பெற குறி மேடைகளுக்குப் போவதைப்பார்க்கலாம். அல்லது தனக்கும் தனது புருஷனுக்குமுள்ள மனஸ்தாபத்தைக்குறித்து குறிகேட்கப்போவதுமுண்டு. இந்த இரண்டு விஷயங்களை குறி சொல்லுகிறவன் எப்படி தீர்ப்பானோ என்று விசாரிப்பதே கிடையாது. இதைப்போன்ற மூட நம்பிக்கையைக்காண்பதரிது. பிள்ளைபிறப்பதற்கு ஆண் பெண் இருவர் திரேகம் தக்க பக்குவத்தில் இருத்தல்வேண்டும். ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்களுடைய திரேகம் பக்குவப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு சந்ததிவிருத்திக்கு தடையென்றுமில்லை. ஆனால் ஏகதேசமாக ஏதோ ஒருவர் இருவருக்கு திரேக பக்குவமில்லாமலிருக்கும். அதனால் கர்ப்பம்தரிக்க முடியாமற்போகும். இதனையும் தீர்த்துக்கொள்ள அவுஷதங்களும் சிகிச்சைகளும் இருக்கின்றன. மலட்டு ஸ்திரீ புருஷர்கள் சிற்சில சிகிச்சையால் சந்தான விருத்தி பெறுகிறார்கள். அப்படியும் சிலருக்கு குணப்படுவதில்லை. மலட்டு ஸ்திரீ புருஷர்களைப்போல் (Sterile man and woman) மலட்டு ஆடும், மாடும், புழுப்பூச்சிகளும் செடிகளும், மரங்களும் உலகில் ஏகதேசமாக இருக்கின்றன. விளையாத நிலங்களும், சில இருக்கின்றன. இவைகளை அதாவது செடி, மரம், புழு, பூச்சி, ஆடு, மாடுகளை உற்பத்தி செய்ய (Reproduce) மதுரை வீரனால் முடியாதிருக்க, ஸ்திரீ புருஷர்களை மாத்திரம் பிரஜா விருத்தி செய்வதென்றால் யார் நம்புவது? இதை உன்மத்தர்கள்தான் நம்பக்கூடும்? பிரஜாவிருத்திக்கு தடையை நீக்க டாக்டர்களுக்கே தெரியுமே அல்லாது மோசக்காரர்களாகிய Mountebangs and Charlatans) குறி சொல்லுகின்றவர்களுக்கு ஒன்றும் தெரியா. மதுரை வீரன் படத்தாலும் உடுக்கைசிலம்பாலும்; தீபத்தின் சுடர் அசைவாலும் மலட்டுத்தனம் நீங்குமாயின் இவ்வளவு சுலுவாக கோடான கோடி கறப்பு நிலங்களை விளையவைக்கலாமே! பதர் நெற்களை (Chaff) கதிர் விடச்செய்யலாமே! சில சமயங்களில் குறிகேட்கப்போனவர்களுடைய கோரிக்கைகளை குறி சொல்லுகின்றவன் அவர்கள் அவனிடம் சொல்லாமலே அவன் தெரிந்துகொண்டவன் போல் தெரிவிக்கின்றான். இதை மாயாவாதத்தில் (Spiritualism) எண்ணத்தை தெரியப்படுத்தாமலே தெரிந்து சொல்வதென்று (Thought Reading) கூறுவர் இதனை மறைவான ஞானமெனவும் [Occultism) கூறுவர் இந்தத்தந்திரத்தை தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஒரு சிறு புத்தகமாகிய (Evidence for the Supernatural by Ivor Tuckett priced 1. shilling) இதனை வாங்கிப்படிக்கலாம். இந்த குறிவித்தையில் சில மோசங்கள் நடக்கின்றன. சில இடங்களில் ரகசிய ஆட்களைக்கொண்டு விசாரித்துத்தெரிந்து கொண்டபிறகு குறி சொல்லுகிறார்கள். சதாரணமாககுடுகுடுப்பைக்காரர்கள் இந்தமோசத்தைச்செய்கிறார்கள். சிலர் தங்களுடைய குறைகள் உதடு அசைவதாலும் கைவிரல்கள் ஆடுவதாலும் மெதுவாக தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதாலும், தங்கள் முகப்பார்வையாலும் தெரியும்படி செய்கின்றார்கள். கூர்மையான பார்வையுடையோனாகிய குறிசொல்வோன் இந்த சைகைகளைக்கொண்டே அவர்களுடைய எண்ணங்களை தெரிந்து கொள்கின்றான். குறி சொல்லுகின்றவன் கேட்கும் கேள்விகளுக்குக் கொடுக்கும் விடைகளாலேயும் தங்களுக்குத்தெரியாமலே தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டுவிடுகின்றார்கள்! இத்தியாதி தந்திரங்களால் குறி சொல்லுகின்றவன் தன்னைப்பிறர் நம்பும்படி செய்கின்றான். இந்த சூழ்ச்சிகளை அறியாத பாமர மக்கள் குறிகாரன் சொல்லெதெல்லாம் மதுரைவீரன் அருளாலென்றும், தெய்வீகத்தன்மையாலென்றும் மதிமயங்கி மூட நம்பிக்கையை வளர்த்து வருகின்றார்கள். இந்தக்குறிமேடைகளில் எத்தனை பெயர் தங்கள் பொருளை இழந்தவர்கள்! மதியை இழந்தவர்கள்! மானத்தை இழந்தவர்கள். இவைகளுக்கு கணக்கில்லை! ஆனால் நமக்கும் நமது நாட்டுக்கும் நன்மையயக்க நமது சுயமரியாதையோர் அதிர்ஷ்டவசமாகத்தோன்றி இத்தியாதி மோசங்களை வெளிப்படுத்தி வரும் நமது நாட்டின் பாக்கியமே பாக்கியம்.

(Palmistry) அதாவது கை பார்த்து குறி சொல்லும் வித்தையொன்றுளது. கைரேகைகளைப் பார்த்து குறவர்கள் (Nomads) சாதாரணமாககிராமங்களில்குறிசொல்வதுண்டு. குடுகுடுப்பைக்காரனும் இவ்வித குறிகளை சொல்கின்றான். பண்டாரவேஷம்போட்டுக்கொண்டு, ஓலைச்சுவடியொன்றை கையில்ஏந்தி, கையைப்பார்த்து குறிசொல்லும் வேஷக்காரர்கள் சென்னைத்தெருக்களிலும் நாட்டுப்புறங்களிலும் பார்க்கலாம். நமது சென்னை மூர் மார்க்கட்டு (Moore Market) க்கு அருகாமையில் அநேகர் ஆரோடம் அதாவது ஓர் வித குறிசொல்லிப் பிழைக்கின்றார்கள். கையைப்பார்க்கின்றான், ஓலைச்சுவடியோ அல்லது காகிதச்சுவடியையோ திருப்புகின்றான், உடனே உனது காரியம் கைகூடுமென்கின்றான். உனது மகன் திரும்பி வருவான் என்கின்றான். உனது புருஷனுக்கு வேலைகிடைக்குமென்கின்றான், இத்தியாதி அற்ப விஷயங்களைத்தான் தெரிந்து சொல்வதுபோல நடித்து இந்த குறி சொன்னதற்கு கால் அணா அதாவது மூன்றுபை பெறுகின்றான். இந்த

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# இந்து மதம் சாதித்தது என்ன?

(ஒரு இந்து)

நமது நாட்டிலுள்ள கலைவாணர்கள் அனைவரும் இந்துமதத்தின் மாட்சிமையைப் பற்றி உரையாடாமலிருப்பதில்லை. "உலகத்தில் உள்ள மதங்கள் அனைத்திலும் பழமையானது இந்துமதம்; கடவுள் என்பவராலேயே இம்மதம் இயற்றப்பட்டது; இதில் உள்ள தத்துவங்களும், கொள்கைகளும், கலைகளும் வேறு எந்த மதத்திலும் இலலை; உலகத்திற்கெல்லாம் தத்துவஞானத்தை அளித்தது இம்மதமேயாகும்; ஆதலால் இம்மதத்தைப்போற்றி வளர்த்தலே இந்தியர்களின் கட்பபாடாகும்; உயரிய பழய செல்வக்தியாக இருக்கின்ற இந்துமதத்தைப் போற்றாவிட்டால் இந்தியர்களின் பெருமை குன்றிவிடும்." என்று வாயளவில் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் மேல் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்த காலங்களிலும் இந்துமதத்தின் பெருமையைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். ஆனல் இன்றுபழக்கத்தில், இந்துமத மானது அதில் உள்ள மக்களுக்கு—அதைத் தழுவியிருக்கும் மாந்தர்களுக்கு என்ன நன்மையையளிக்கின்றது என்பது பற்றிச்சிறிது ஆராய்ந்து பார்ப்போம். இதை அறிவதற்கு முன்நமது நாட்டில், சிறந்து விளங்குகின்றமற்றமதங்கள், அவைகளைப் பின்பற்றும் மக்களுக்கு என்ன செய்கின்றன என்பது பற்றிச்சிறிது தெரிந்து கொள்வதும் இன்றியமையாததாகும். இச்செய்திகளை அறிந்தபின்னர், இந்து மதம் இந்துக்களுக்குச்செய்து வரும் நன்மையையும் அறிந்து இரண்டையும் ஒத்திட்டுப்பார்த்தால், சுயமரியாதை இயக்கத்தினர் இந்து மதத்தைக்குறை கூறுவதன் உண்மை நன்ருக விளங்கக்கூடும்.

முதலில் "முஸ்லிம் மார்க்கத்தை" க்கவனிப்போம். இம்மார்க்கத்தில் வெளிப்பார்வைக்கு எவ்வளவோ ஊழல்கள் காணப்படலாம். இந்துமதத்தைப் போலவே, புரோகிதர்களால் இடைக்காலத்தில் உண்டாக்கப்பட்ட பற்பல சடங்குகளும், அறியாமையை உண்டாக்கும் பழக்க வழக்கங்களும், பொருளற்ற செயல்களும், நடைபெற்று வரலாம். அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, முதன்மையான கொள்கைகளை மட்டிலும் உற்று நோக்குவோம்.

முதலில், "முஸ்லிம்" தோழர்கள் நம்மைப்போல, தங்களுக்குளளேயே மிகுந்த சாதிவேற்றுமை பாராட்டிக் கொள்ளுவதில்லை. நாம், நம்மைச் சேர்ந்த இந்துக்களிலேயே பலரை, தெருவில் நடக்க விடாமலும், கோயில்களுக்குள் நுழைய விடாமலும், குளம் கிணறுகளில் தண்ணீர் முகக்க விடாமலும், பள்ளிக்கூடங்களில் கல்விபயில விடாமலும் தடுப்பது போல அவர்கள் எந்த "முஸ்லிம்" சகோதரரையும் தடுப்பதில்லை. "முஸ்லிம்" என்று சொல்லக்கூடியவர்கள் எவராயிருப்பினும் அவர்களுடன் உடன் பிறந்தார்போல நடந்து கொள்ளுகின்றனர். அவர்களுடைய "மசூதிக"ளில் சிறிதும் வேறுபாடு இல்லாமல் அரசனும் பக்கிரியும் ஒன்ருகமண்டியிட்டு வணங்குகின்றனர்.

அன்றியும் அவர்களுடைய பெண்களுக்கும், ஆண்மக்களைப்போலவே எல்லா உரிமைகளையும் தாராளமாக அம்மதம் வழங்கியிருக்கின்றது. விதவாவிவாகம் புரிந்து கொள்ளலாம்; விவாக விடுதலைசெய்து கொள்ளலாம்; ஆண்மக்களைப்போலவே பெண்மக்களுக்கும் சொத்துரிமையுண்டு.

குடிப்பழக்கமென்பது எள்ளளவும் அவர்களிடம் இல்லை. அதைமதம் மிகவும் வன்மையாகக் கண்டித்து ஒதுக்குகின்றது. அன்றியும், நம்மைப் போன்று "விக்கிரக ஆராதனம்" செய்யாதகாரணத்தால்குடிப்பழக்கம் ஏற்படுவதற்கேஇடமில்லாமலும் ஒழிந்து விட்டது என்றுகூறலாம்.

மேற் கூறிய சிறந்தகொள்கைகள் இன்றும் "இஸ்லாம் மார்க்க" த்தில் நிலைபெற்று இருக்கும் காரணத்தால் அதைப்பின்பற்றும், மக்கள் வரவர வளர்ச்சியடைந்தும், செல்வத்திற் சிறந்தும்உயர்ச்சியடைந்து வருகின்றனர்.

அடுத்தபடியில், இந்தியாவில்சிறப்பாகப்பரவி இருக்கும் கிறிஸ்துவ மதத்தை எடுத்துக்கொள்ளுங்கள் அதுவும் மக்களுடைய வறுமையைப் போக்குவதிலும், மக்களுக்குக்கல்வி பதிவையூட்டுவதிலும். மருத்துவ உதவியளிப்பதிலும் சிறந்து நிற்கின்றது என்பதில் ஐயமில்லை. அந்த மதத்தைப்பின் பற்றும் மக்களும் நாளுக்கு நாள், ஒற்றுமையடைந்து கல்வியறிவிற் சிறந்து, மக்கள் கூட்டத்தில் பெருகி முன்னேறிவருகின்றனர்.

கிறிஸ்துவமதமும், மனித சகோதரத்துவத்தைப் போதிக்கின்றது. தற்பொழுது இந்தியாவில்உள்ள கிறிஸ்தவர்கள் இந்துக்களின் சார்புகாரணமாக வகுப்பு வேற்றுமை பாராட்டக்கூடியவர்களாயிருந்தாலும் வகுப்பு வேற்றுமைக்கு அவர்கள் மதத்தில் ஆதாரமேயில்லை. கிறிஸ்துவ மதத்திலும் ஆண்களைப்போலவே பெண்களுக்கும் எல்லா உரிமையும் உண்டு. சொத்துரிமையுண்டு. விதவாவிவாகம் உண்டு; ஒருவனொருத்தியைத்தான் மணம் புரிந்துகொள்ளலாம். மற்ற நாடுகளில் விவாக விடுதலையுண்டு. இந்தியாவில் மட்டிலும் இல்லை. ஆகவே இம்மதம் அதைப் பின்பற்றும் மக்களுக்கு நன்மை செய்து வருவதை அறியலாம்

ஆனல் இந்துமதம் அதைப்பின் பற்றும் மக்களுக்கு என்னசெய்து வருகின்றது? என்றுஆராய்ந்துபாருங்கள்! இந்து மதத்தில் தொடக்கத்தில் அமைக்கப்பட்ட நாலுசாதி, இன்று நாலாயிரம் சாதிகளாக ஆகி இருக்கின்றன. இந்தக்காரணத்தினுல், இன்று இந்துக்கள் என்பவர்கள் ஒருவரோடு ஒருவர் உடன்பிறப்புத் தன்மை பாராட்ட முடியாதவர்களாகவும், ஒருவரிடம் ஒருவர் அன்போ இரக்கமோ, காட்டமுடியாதவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இந்து மதத்தைச்சேர்ந்த மக்களில் நூற்றுக்குத்தொண்ணூறுபேர் ஏழை மக்கள்; அவர்களுக்கு இருக்க இடமில்லை; உண்ண உணவில்லை; படிக்க வசதியில்லை; வேலைசெய்து பிழைக்க உதவியில்லை; இந்தநிலையை நினைத்துப்பார்க்கும் எவரும் இரத்தக்கண்ணீர் சிந்தாமலிருக்க முடியாது. இந்தியாவிலேயே, பழமையான "தெய்வீக" மான இந்துமதத்திலேயே பிறந்த மக்கள், இந்நாட்டில், அரை வயிற்றுஉணவுக்கும் இடமில்லாமல் கடல் கடந்து வேற்று நாடுகளில் குடியேறுகின்றனர்.

இன்று, சிலோனில், தோட்டங்களில் கூலிவேலை செய்து துன்புறும் மக்கள்யாவர்? மலேயா நாட்டில் இரப்பர்தோட்டங்களில் வேலை செய்யச்சென்று, இரத்தத்தைசிந்திவிட்டு வெற்றுடலோடும், வெறுங்கையோடும், ஒவ்வொரு வாரத்திலும் ஆயிரக்கணக்காக வேலையில்லாமல் இந்தியாவுக்குத்திரும்பும்மக்கள் யார்? இன்று தென்னப்பிரிக்காவில்வெள்ளையர்களால் பலவகையிலும் அவமானப்படுத்தப்படும் மக்கள்யார்? கனியாவில் சென்று உடலோம்பும் பொருட்டு மானமிழந்து துன்புறும்மக்கள்யார்?என்றுஆராய்துபார்த்தால் இவ்வுண்மைவிளங்கும்.

இவ்வாறு இந்தியாவை விட்டு அயல் நாடு புகுந்துதுன்புறும்மக்கள், முஸ்லிம் சகோதரர்கள் அல்லர்; கிறிஸ்துவ சகோதரர்கள் அல்லர்; என்பது மட்டிலும் உண்மை. ஆனல் நமது இந்துச்சகோதரர்கள் தான் இவ்வாறு துன்புறுகிறார்கள். கிறிஸ்துவசகோதரர்களும், முஸ்லிம் சகோதரர்களும் அயல் நாடுகளுக்குச் செல்லாமல் இல்லை; அவர்களும் அயல் நாடுகளுக்கு மிகுதியாகக்குடியேறுகிறார்கள்.

ஆனல் அவர்களுக்கும் நமது இந்துக்களுக்கும் ஒருவேற்றுமையுண்டு. அயல் நாடுசெல்லும், முஸ்லிம்கள் பெரும்பாலும் வாணிகத்தை மேற்கொண்டு செல்லுகிறார்களேயொழி இந்துக்களைப்போல வெறுங்கூலியாட்களாகச்செல்வதில்லை. அங்குள்ள முஸ்லிம்களும், இங்கிருந்துசெல்லும் முஸ்லிம்களை ஆதரித்து உதவிபுரிகிறார்கள. ஏனெனில் அவர்கள் மார்க்கம் அவர்களுக்குள் ஒற்றுமையும் சகோதரத்துவத்தையும் உண்டாக்கியிருக்கிற தன்றோ?

இதைப்போலவே கிறிஸ்துவர்களும் அயல்நாடுகளுக்குச் சென்றால் அரசாங்கவேலையின் பேரிலோ, அல்லது வேறுகெளரவமான தொழிலின் பேரிலோ தான் செல்லுகிறார்கள். ஆகையால், அயல் நாடுகளுக்குச்செல்லும் கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும், இந்துக்களைப் போலத்துன்புறுவதில்லை; மானமிழப்பதில்லை; பெருமையுடன் வாழ்ந்து, செல்வத்துடன் தாய்நாடு திரும்புகின்றனர்.

இந்துக்களோ, கூலிகளாகச் சென்று, துன்ப வாழ்க்கை வாழ்ந்து வெறுங்கையோடு திரும்புகின்றனர்." அயல் நாட்டில் இந்துக்கள் பொருளீட்டாமல் இல்லை: பொருளீட்டுகின்றார்கள். ஆனல் அப்பொருள் பாழும் இந்துமதத்தால் செலவழிகின்றது. பிழைக்கச்சென்ற இடங்களிலும், இந்துமதச்சாமிகள் குடிபுகுந்து விடுகின்றன. அவைகளுக்கு இந்துக்கள், தாம் சம்பாதிக்கும் பொருள்களை, பண்டிகைகளின் பேராலும், திருவிழாக்களின் பேராலும் செலவழிக்க வேண்டியிருக்கின்றன. இக்காரணத்தால் இவர்களிடம் பொருள் மிஞ்சுவதில்லை.

உதாரணமாக, இப்பொழுது தென்னப்பிரிக்காவில் வாழும் இந்துக்கள் பொருளாதார நிலையில் மற்றநாடுகளில் வாழும் இந்துக்களைக்காட்டிலும் மிகவும் சிறந்து விளங்குகிறார்கள் என்று கூறலாம். இதற்குக் காரணம் அவர்களிடம் இந்துமதம் மிகுதியாகப்புகாமலிருப்பதே யாகும்; அவர்களுக்கு இந்துமதத்தின கோட்பாடுகளும், அதில் ஏற்பட்டிருக்கும் எண்ணற்ற பண்டிகைகளைப்பற்றியும் நமது நாட்டுமக்களுக்குத்தெரியும் அவ்வளவு தெரியாது. ஆதலால் அவர்கள் செல்வம் வீணுகாமல் மீதப்படுகிறது என்று சொல்லலாம்.

எல்லாமதங்களும், மக்களுக்குள் மூட நம்பிக்கையும், பிடிவாதத்தன்மையும், பொருளற்ற செயல்களையும் போதிக்கின்றன; மக்களின் அறிவு வளர்ச்சியைத்தடுக்கின்றன; உலக ஒற்றுமைக்கு எதிராக இருக்கின்றன; ஆகையால் எல்லா மதங்களும் அழிந்து தீரவேண்டும் என்பது நமது உள்ளக்கிடக்கையானுலும்,முதலில், உடனே இந்துமதம் அழிந்து தீரவேண்டும் என்று கூறுகின்ரேம்.

மற்றமதங்கள், அதாவது கிறிஸ்துவம் முதலானவைகள், உலக சமாதானத்திற்கு எதிராக இருந்தாலும், தமது சொந்த மக்களுக்கு இந்து மதத்தைப்போல் அவ்வளவுகொடுமையைச் செய்வதில்லை என்பதை

# சீர்திருத்தத் திருமணங்கள்.

## பட்டுக்கோட்டை.

பட்டுக்கோட்டை செட்டியார் வீதியில் அமைந்துள்ள. வைக்கம் வீரர் மஹால் என்னும் சிங்காரபந்தலில் 28-8-32 ஞாயிற்றுக் கிழமை காலை 9-மணிக்குமேல் புதுக்கோட்டை தோழர் முத்துசாமி வல்லத்தரசு பி. எ. பி. எல்., எம். எல். சி. அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்திற்குக் கும்பகோணம், மன்னார்குடி, தஞ்சாவூர், திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம், காரைக்கால், திருவாரூர், பொன்மலை, முத்துப்பேட்டை, செட்டிநாடு, காரைக்கால் முதலிய ஊர்களி லிருந்து பல பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள். தோழர் முத்துசாமி வல்லத்தரசு பண்டைய நாளில் நம் தமிழ் மக்கள் செய்துவந்த திருமணங்களைப்பற்றியும், தற்காலத்தில் நம் மக்களை ஏமாற்றி வயிற்று பிழைப்புக்காக ஆரியப்பார்ப்பனர்களால் ஏற்படுத்தி இருக்கும் புரோகித சடங்குகளைப்பற்றியும், பார்ப்பனர் இல்லாமல் செய்யும் திருமணங்களின் நன்மைகளைப் பற்றியும் கேட்போர் மனம் உருகும்படி சுமார் ஒரு மணி நேரம் விரிவாகவும் அழகாகவும் பேசினார். பின்னர் தோழர் கே. வி. அழகர்சாமி சீர் திருத்த திருமணத்தின் அவசியத்தைப்பற்றியும் வாலிப இளஞ்சிங்கங்கள் இனிமேல் நடந்து கொள்ள வேண்டிய நிலைமையைப் பற்றியும் மணமகன் தோழர் சி. என். விஸ்வநாதன் நடந்து கொண்ட மன உறுதியைப்போல் இனி வருங்கால வாலிபர்கள் நடக்க வேண்டியது அவசியம் என்பதையும் பணக்காரக் குடும்பங்களில் நடக்கும் ஆடம்பரமான கல்யாணங்களையும் வீண் செலவுகளை பற்றியும் மக்கள் மனதில் பதியும்படி சுமார் ஒருமணிநேரம் பேசினார் பகல் 1மணிக்கு பல ஊர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் வந்திருந்த கனவான்கள் சுமார் ஐந்நூறு பேருக்கு சம்பந்தி போஜனம் நடை பெற்றது குறிப்பிட தக்கது.

### பொதுக்கூட்டம்.

மேற்படி திருமணத்தன்று மாலை 5-மணிக்குத் திருமண பந்தலில் அணைக்காடு தோழர் ஏ. சாமுவேல் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காரைக்கால் தோழர் சவுரிராஜன் சுயமரியாதை கல்யாணமும் நமது மக்களும் என்பதை பற்றியும் பணவெறி பிடித்தவர்கள் நமது மக்களை படுத்தும் இழிவான தன்மையை பற்றியும் சுமார் ஒருமணி நேரம் பேசினார். அடுத்தபடியாக தோழர் முத்துசாமி வல்லத்தரசு சுயமரியாதை இயக்கமும் தமிழர்கள் கடமையும் என்பதைப் பற்றிக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் மனதில் பதியும்படி மிகவும் உற்சாகத்துடன் சுமார் 2-மணி நேரம் பேசினார். பின்னர் தோழர் கே. வி. அழகர்சாமி சுயமரியாதையும் வாலிபர்கள் கடமையும் என்பதுபற்றி சுமார் ஒருமணி நேரம் விரிவாய் பேசினார். அதன் பின்னர், தலைவர் முடிவுரை கூறியதும் வந்தன உபசாரம் கூறப்பட்டு இரவு 10-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

(ஒரு நிருபர்)

## ஸ்ரீ ரங்கம்.

திருமதி எஸ். நீலாவதி அம்மையார் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் நாடு புரோகித மறுப்புச்சங்கத்தின் சார்பில் ஸ்ரீரங்கம் திரு தருமலிங்கம் பூசாரியார் பூங்காவனத்தில் ஆகஸ்டுமீ 31ந்தேதி மாலை 5மணிக்கு ஓர் விதவா விவாகம் நடைபெற்றது. மணமகள் வாளாடி திரு சங்கிலி முத்தர்பிள்ளை அவர்கள் மகள் திரு பூரணம் அவர்களும், மணமகன் முத்தரசநல்லூர் திரு அப்புசாமி பிள்ளை அவர்கள் மகன் திரு எம். ஏ. சுப்பிரமணியம் அவர்களும் தங்கள் மணஒப்பந்தத்தைத் தெரிவித்துக் கொண்டபின் மாலை மாற்றி திருமங்கலியம் சூட்டப்பெற்றது. சுமார் 300 ஆடவர் பெண்டிர் கூடியிருந்தனர் திருமதி எஸ். நீலாவதி அம்மையார் தலைமைவகித்து விதவை மணத்தின் அவசியத்தைப் பற்றி விளக்கிப் பேசினார்கள். பின்னர் தோழர்களான வி. பி. ராஜகோபாலபாரதி, பரிமணப்பல்லவராயர், அ. பொன்னம்பலனார், ராம சுப்பிரமணியம், டி. ஆர். பாலகிருஷ்ணன், டி. சஞ்சீவி, திராவிடரத்தினம் திரவியம் முதலியவர்கள் திருமணத்தைப் பாராட்டிப் பேசினார்கள். திரு ராஜகோபால பாரதியாரால் சில சீர் திருத்தப் புத்தகங்கள் மணமகளுக்கு கொடுக்கப்பெற்றது. பின்னர் தம்பதிகளை போட்டோ எடுக்கப்பெற்றதும் வந்திருந்தோரனைவருக்கும் சந்தன தாம்பூலம் புஷ்பம் கற்கண்டு வழங்கப் பெற்று இனிது முடிந்தது. பின்பு உறையூர், தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்கத்தின் காரியதரிசி தோழர் ச. ம. சி. பரமசிவம் அவர்கள் வந்தனம் கூறினார்கள். மாலை 7மணிக்கு வந்திருந்தோர் இனியில் தம்தம் ஊர்களுக்குச் சென்றனர், தம்பதிகள் திருச்சி சென்றனர்.

(ஒரு நிருபர்)

## மாயவரம்.

### மருத்துவ குல திருமணம்

மருத்துவகுலசங்கத்தின் ஆதரவில் ஆவணிமாதம் 6ந்தேதி இவ்வூர் சித்தாக்காடுகே. மலையப்பெருமாள் வைத்தியர் இல்லத்தில் ஷையார் தங்கை திருமதி ஜெகதாம்பாளுக்கும், நாகை சிக்கவெளி திரு உத்திராபதி வைத்தியரின் புத்திரன் திரு இராமய்யா வைத்தியருக்கும் திருமணம் நடைபெற்றது. அத்திருமணத்திற்கு சென்னை பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் வாழ்த்துத்தந்தி யனுப்பியிருந்தார். பலர் திருமணத்தைப் பற்றியும், மருத்துவர்கள் முன்னேற்றத்தைப் பற்றியும் பேசியபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

டாக்டர்

**சிங்காரம் அவர்களின்**

**மஹா சந்தன திர்த்தைலம்.**

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது

கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் அரிப்பு
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேக நீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கை கால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்திகாங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி

பீனிசம்
தலை மயக்கம்
தலைப் பொடுகு
சொரி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்
முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
12 ,, ,, ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ.,**
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

**3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனாம்.**



வாசனையிற் சிறந்தது ஓட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்குவோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனாமாய் கொடுக்கப்படும். இனாம் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏழை சொல்லும் குறிக்கும் 'இந்து' முதலிய பேப்பர்களில் விளம்பரப்படுத்தும் பிரசண்ட சோதிடருக்கும் ஒன்றும் வித்தியாசமில்லையென அறிக, ஒரே வித்தியாசமுண்டு. அதாவது ஒருவன் காலணாவுக்கு குறியோ, சோதிடமோ, ஆருடமோ சொல்கின்றான். மற்றொருவன் ஒரு ரூபாய் முதல் 5, 10, 15 வரை பெறுகின்றான். இரண்டு நபரும் சொல்லும் சோதிடங்களில் ஒன்றும் மெய்யில்லை. எல்லாம் மனமயக்கே. பொய்யை நம்புவதற்கு வெறும் நம்பிக்கை (Simple Belief) தான் வேண்டும். லண்டன் பட்டணத்தில் சில பெரிய தெருக்களில் கொட்டை கொட்டையான எழுத்துக்களால் 'இங்கு கைபார்த்து குறி சொல்லப்படும், இங்கு எல்லாக்குறைகளும் நிவர்த்திக்கப்படுமென்று' விளம்பரமிடும் விளம்பரம் பலகைகளைப்பார்க்கலாம். அங்கும், இங்கும், எங்கும் பாமர ஜனங்கள் தங்கள் சஞ்சலங்களை கிரமமான வழிகளில் போக்கிக்கொள்ளாமல் மூட சோதிடனிடம் குறிகேட்டு மயங்குகின்றார்கள். அறிவை இழந்தவர்கள்தான் இத்தியாதி பித்தலாட்டங்களுக்கு இடம் கொடுப்பார்களேயொழிய அறிவுடையார் இந்த மூட நம்பிக்கைகளுக்கு இடம் தாரார்கள். உலகில் கோடானகோடி மக்கள் காலை முதல் இரவுவரை உழைத்து தங்கள் ஜீவனத்தைச் செய்து உயிர் பிழைத்து வருகின்றார்கள். ஆனால் சிலர் வேலையொன்றும் செய்யாமல் சோம்பல்கொண்டுஅறிவையும், வளரச்செய்யாமல் பகுத்தறிவையும் கொன்று சிற்சில மோசவார்த்தைகளைக்கேட்டு ஓர்வித ஆறுதலை அடைகின்றார்கள். சோதிடம், ஆருடம், குறி முதலிய வித்தைகள் ஒரு வகுப்பார் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட உபாயங்களென அறிக. மெஞ்ஞான முறையால் இனிவரும் சம்பவங்களை அறிவது போல் இந்த குறிகளாலும் சோதிடத்தாலும், கைகுறியாலும், ஒன்றும் தெரிந்து கொள்ளவகை இல்லை. எவரும் தெரிந்துகொண்டவருமில்லை. சோம்பேறிகள் மனத்திருப்திக்காக (Mental Satisfaction) உண்டாக்கிக்கொண்டது இந்த வித்தைகளேயொழிய பொது மக்களுக்கு பொதுப் பிரயோசனத்துக்கு ஏற்பட்ட வித்தைகள் அல்லவென அறிதல் வேண்டும்.

கையிலுள்ள கோடுகளைப்பார்த்து ஜோஸ்யம் சொல்லுவது உலகமுழுமையும் பரவியுள்ள ஓர் வித்தையாகும். அது வெறும் பழக்கமே அல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப்போல் நமது ஒரு காலத்து பூர்வ பங்காளிகளாகிய வாலில்லாக்குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரபங்களாகிய (Distant Cousins) வாலுடையகுரங்குகளுக்கும், கையில் கோடுகள் இருக்கின்றன. ஆனால் காட்சிசாலைகளில் வசிக்கும் காட்டு மனித குரங்குகளின் கைகளைப்பார்த்து ஜோதிடம் சொல்வார் யாருமில்லை! நமது கைகளில் இருக்கும் கோடுகள் (grooves) பூர்வகாலத்தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப்பிடித்து தாண்டுங்காலையில்வுண்டான தோல் மடிப்புகள். அந்தவம்சத்தில் இருந்து வந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பரம்பரையாக (Hereditory) தோன்றுகின்றன. நமது கைக்கோடுகள் காட்டுக்குரங்குகளின் வம்ச பரம்பரையாக வந்தவை. பல கோடி வருஷங்களாக நமது மூதாதைகள் மரங்களில் வாழுங்காலை தாவுவதற்கு தங்கள் கைகளை உபயோகித்துவந்து இருக்கவேண்டும். இன்றைக்கும் வாலுடைய குரங்குகளும், வாலில்லாக்காட்டு மனிதக்குரங்குகளும் அம்மாதிரியாகவே தாவிச்செல்கின்றன. அப்படித்தாவிச்செல்வதால் கைகளும் மடிக்கவேண்டி வருகின்றன, கைகள் மடியுண்ட இடங்களில் வரிவரியாக கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள்தான் அந்த சந்ததி மூலமாக நமக்கும் வந்திருக்கின்றன. இதுதான் நமது உள்ளங்கைகளில் உண்டாயிருக்கும் கோடுகளின் உற்பவம். மரத்தைத் தாண்ட மடிந்த இடங்களைக்கொண்டு நமது நடத்தைகளை எப்படி அறியக்கூடுமெனக் கேட்கின்றோம்? இரண்டுவரி ஐந்தாம் விரலுக்குக்கீழ் இருந்தால் அவனுக்கு இரண்டு பெண்சாதியாம்! ஆனால் ஒருவரியுடைய பலருக்கு பலபெண்சாதிகள் இருப்பதைக்காணலாம்!! ஆதலின் இந்த வரிகளைக்கொண்டு நமது நடவடிக்கைகளைக்குறிப்பது ஆங்கிலத்தில் (pure guess) என்று சொல்லலாம். அதாவது வெறும் உத்தேசம்! இந்த வெறும் உத்தேசத்தை உண்மையென நினைத்துக்கொண்டு மோசம் போகின்றவர்கள் அனேகர் உளர். இந்த ஆதாரத்திற்கு இன்னொரு ஞாயமும் உண்டு. விரல்கள் மடியும் இடங்களில் கோடுகளைப் பார்க்கலாம். இந்தக்கோடுகள் விரல்கள் மடியுண்டபடியால் விரல்மடிப்புகளிலெல்லாம் விரல்வரிகள் தோன்றிவுள்ளது. இப்பிரத்தியட்சக்காட்சி அதுபோலவே மற்ற கைவரிகளும் தோன்றிவுளது. ஆனால் விரல் மடிப்புகளைக்கொண்டு நமது நடவடிக்கையைக்குறிக்கும் கைக்குறி சொல்வோர் இல்லை எனக்கருதுகின்றேன், அந்த விரல் மடிப்புகள் பிரயோஜனமில்லையெனில் மற்ற கைமடிப்புகள் மாத்திரம் பிரக்யாதி பெற்றது எவ்விதம். எவனோ ஒருவன் ஒருகாலத்தில் கைககோடுகளைப்பார்த்து குறி சொல்லியிருப்பான். அது முதலில் வெறும் உத்தேசமாகவே சொல்லியிருப்பான். இதை உண்மையென நம்பி பழக்க வாசனையால் கையைப் பார்த்து குறிசொல்லும் பழக்கம் வந்திருக்கவேண்டும். இவ்விதமாகத்தான் நமது கையைப்பார்த்து குறிசொல்லும் பழக்கம் உண்டாய் இருத்தல்வேண்டும். எந்த மூடனும் இந்த பழக்கத்தைக்கையாளலாம். ஆனால் இந்த மூடநம்பிக்கையில் விஸ்வாசமுள்ளவர்களைப்பற்றித்தான் நாம் வருந்துகின்றோம்.

விளக்கு வைத்துப்பார்த்தல் எனும் ஓர்மூடபழக்கம் பாமர மக்கள் வீடுகளில் வழங்கி வருகின்றது. ஒரு பூசாரி தன்முன் ஒரு விளக்கை ஏற்றி அந்த எரியும் சுடரை அந்த அம்மன் இந்த அம்மன் என்று வர்ணித்து இதைச்சொல்லம்மா, அதைச்சொல்லம்மாவென எரியும் சுடருடன் பேசுவதைப்போல் நடித்து, சுடர் அசையாமலிருந்தால் 'அம்மா உத்திரவு அளிக்கவில்லை' என்றும் அசைந்தால் 'அம்மா உத்திரவு கொடுத்தாளெனவும்' அர்த்தப்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றும் விதம் ஒன்றுண்டு. இதுவும் ஓர் ஜீவன உபாயமென அறிக. கிராமாந்திரங்களில் ஏழைகள் நோய்பட்டால் இம்மாதிரியான மூடப்பழக்கங்களைக் கொண்டு நிவர்த்திக்கப்பார்க்கின்றார்கள். இதனுடைய ஆபாசத்தை (Absurdity) சற்று விளக்கிப் பார்க்கவேண்டும். கோடானகோடி தீபங்கள் தெரிகின்றன. அசையாத தீபங்களும் தற்காலத்தில் பார்க்கின்றோம். அதாவது மின்சார (Electric) தீபங்கள், இந்த தீபச்சுடர்கள் காற்றிலும் அசைவதில்லை. காற்றில்லாமல் போமாகில் சுடர் அசைவற்று எரியும். காற்று வீசியதும் தீபச்சுடர்கள் அசைவதைப் பார்க்கலாம். இந்தச்சுடர்கள் அசேதனங்கள், அதாவது உயிரற்றவை, நமது சொல்லுக்கு அடங்காதவை, நமது சொல்லையும் கேட்க முடியாதவை, நமது காலில் மிதிபடும் கல்லுக்கும் விளக்கில் எரியும் திபச்சுடர்களுக்கும் மேற்கண்ட விஷயங்களில் வித்தியாசமில்லை. அப்படி இருக்க, எவ்விதம் அச்சுடர்களுடன் பேசக்கூடுமோ அது நமக்கு விளங்கவில்லை, பைத்தியம் பிடித்தவர்கள்தான் சுடருடனும், சுவருடனும், செடி, மரங்களுடனும் பேசுவார்கள். இந்த விஷயத்தை யோசியாமல் விளக்கு வைத்துப்பார்த்து அத்துடன் பேசுவதென்றால் என்ன மூடத்தனமென்று எண்ணவேண்டும்? பூசாரிதான் அவன் ஜீவனத்திற்கு மோசம் செய்கின்றான். பஞ்சரிவுடைய ஏழைமக்கள் அவன் பித்தலாட்டத்திற்கு ஏமாந்து, அவன் பிதற்றுவதைக்கேட்டு அதை நம்புவதென்றால் என்ன மதிமோசம்! விளக்கில் அம்மனோ சாத்தானோ, சனியனோ புகுந்துகொண்டு பூசாரி கேட்பதற்கெல்லாம் விடை கொடுப்பதாக சொன்னாலும் முன் நம்பிக்கையைவிட இது நம்பத்தகாதது, அதனினும் ஆபாசமேயாகும். தீபச்சுடர்களை காற்றில்லாத அறைகளில் எரியவைத்து நமக்கு வேண்டியபடி தீபச்சுடரை அசையவைக்கலாம். திருஷ்டாந்தமாக இதனை யாரும் பரீட்சித்துப் பார்க்கலாம். காற்றில்லாத கூடத்து அறையில் விளக்கை ஏற்றி அதன் அருகே உட்கார்ந்துகொண்டு காற்றை மெதுவாக வாயின் மூலமாக இழுத்தால் சுடர் அசைவற்று நிற்கும். அது நமது இஷ்டப்படி அசையவேண்டுமானால், கையை ஆட்டினாலும், நமது தேகத்தை ஆட்டினாலும், அல்லது மெதுவாக ஊதினாலும் தீபச்சுடர் அசையும், இவ்வித சலனமற்ற நிலையையும், அசையும் நிலைமையையும் யாரும் செய்து காட்டலாம். ஆனால் இவ்விதமாக சுடர்களை அசையச் செய்வதையும், அசையாமல் இருக்கச் செய்வதையும், யாரும் தகுந்த இடங்களில் செய்து காட்டலாம். இவ்விதமாக யாவரும் செய்துகாட்ட முடியும்போது எந்த அம்மனும், மாரியாத்தாளும், மதுரை வீரனும் தீபச்சுடரில் புகுந்து கொண்டதாக எண்ணுவதில்லையே. ஆனால் பூசாரி அதேமாதிரி அசையவைத்தால் அந்த அசைவு தெய்வங்களால் உண்டானதாக எண்ணுவது பைத்தியக்காரத்தனமல்லாது வேறென்னை? காற்றில்லாமலிருந்தால் சுடர் அசைவற்று எரிகிறது. காற்றுபட்டால் அசைகிறது. ஆதலின் அசைவுக்கும், அசையாத்தன்மைக்கும் காற்றே காரணம். இதற்கு எந்த அம்மன் தயவும் வேண்டுவதில்லையே. இந்த பித்தலாட்டங்களைச்செய்யும் பூசாரிகளையும், அவர்கள் சொல்வதையும் பாமர மக்களையும் ஒன்று கேட்கின்றோம். அதாவது காற்றடிக்கும் அறைகளில் அதாவது ஜன்னல்களுக்கு எதிரிலாகிலும், வாசல்களிலாகிலும், தெருக்களிலாகிலும், தீபத்தை குத்திவிளக்கில் ஏற்றி அதன் சுடரை அசைவற்று நிற்கும்படி செய்யுங்கள் பார்ப்போம்? என்ன நீங்கள் உறத்து அம்மனை வர்ணித்தாலும் அந்த அம்மன் சுடரில் நுழையவே மாட்டாள்! இந்த தந்திரத்தை அறிந்த பூசாரி கூடத்து மூலையிலும் காற்றில்லா அறையிலுமே சுடரை எரியப்பார்ப்பான். இதுதான் பூசாரிகள் செய்துவரும் தந்திரம், இனி குடங்களை தலையிலேந்தி தெய்வமாடும் பித்தலாட்டத்தினை விசாரிப்பாம்.

---

கூட்டம்.

---

10—9—32 சனிக்கிழமை மாலை 5-ந்து மணிக்குமேல் கோலர் தங்கவயல் மாரிகுப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபாமண்டபத்தில் திரு ஜி. அப்பாதுரையாரின் அக்கிராசனத்தின் கீழ் திருமதிகளாலும், திருவாளர்களாலும், அரிய சொற்பொழிவாற்றப்படும் அக்கால் சகோதரிகள் சகோதரர்கள் யாவற்றாலும் வந்தேகும்படியாய் கோரும் கொரவ காரியதரிசி... 

# நரபலி.

(தோழர் ரா. சேஸிராஜன்)

விரலில் அடக்கி வைத்திருந்த பொடியை உறிஞ்சிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்த சுப்பையர் வேணுமுதலியாரை வெளி அறையிலேயே சந்தித்துக் கொண்டார். இருவரும் பழய நண்பர்கள். ஆனால் ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாதவர்களைப் போலவே இருவரும் மௌனம் சாதித்தார்கள். வழக்கம்போல்பொடி உபசாரமோ, தமாஷ்ப்பேச்சோ கிடையாது. பொதுவாக அவர்களுடைய நடை, முகம், மனம் இவைகளில் பெரிய மாறுதல் காணப்பட்டது.

ஐந்து நிமிஷம் சென்றது. துக்கப்பட்டோரும் அதை விசாரிக்க வந்தோரும் நடந்து கொள்ள வேண்டிய முறைப்படி ஆத்மார்த்த நண்பர்களாக இருவரும் நடந்து கொண்டார்கள்.

சுப்பையர் தேருதல் சொல்ல ஆரம்பித்தார்—நம்மால் ஆவதென்ன எல்லாம் ஆண்டவன் செயல்—(இந்தியன் பிறந்தது முதல் பாடை ஏறும் வரையில் இந்த வாக்கியம்தான் அவனுடைய வாழ்க்கையின் வழிகாட்டி)

அய்யர் உபதேசித்த தத்துவத்தை வேணுமுதலியார் வெகு நிதானமாக கிரகித்துக் கொண்டார்.

மனிதர்களுக்கு திடீரென நேரும் துரதிர்ஷ்டத்தைப் பற்றியும், துன்பம் நெருங்கி வந்தபோதும் பொறுமையாய் இருப்பவர்களின் பெருமையைப் பற்றியும் விளக்கிக் கூறிவிட்டு சுப்பையர் சொன்னார் “விதவையான சிறு பெண்களைப் படிக்கவைக்கும் மூடப்பழக்கம் நம்மிடமே பரவி வருகிறது. அக்கொடிய பழக்கம் தங்கள் குடும்பத்தில் குடி கொள்ளுமோ என அஞ்சுகிறேன்”

வேணுமுதலியார்—சிறு பெண்ணாயிற்றே! படிக்கவைப்பதில் என்ன தோஷமென்று எண்ணினேன். ஆனால் கல்வி கற்றதும் விதவைகள் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமாம்!

அய்யர்—ஆமாம், பெண்கள் மனதைக் கெடுப்பதற்கென்று சென்னையில் எவ்வளவு சங்கம், எவ்வளவு ஸ்தாபனம்.

அய்யர் ஈஸ்வர தியானம் உள்ளவர். முதலியாரோ சாப்பாட்டில் தொண்டை விக்கிக் கொண்டாலும் அது ஆண்டவன் செயல் என்று பாவிக்கும் இயல்புடைய—தெளிந்த—தெய்வபக்தியுடையவர், இருவரும் ஒன்று சேர்ந்து கொண்டால் ஈஸ்வரன் இவர்களைவிட்டு அப்புரம் அடியெடுத்து வைக்கமுடியாது.

ஃ ஃ

சனிக்கிழமை நான்குமணியிருக்கலாம். தாழ்வாரத்தில் ஒரு பெண்கள் கூட்டம் கூடியது. உபன்யாசம் கிடையாது! வீண் வம்பு கிடையாது!! ஆனால் அழ ஆரம்பித்து ஒப்பாரி வைத்தார்கள். சுமார் ஒருமணி நேரம் வரையில் சகல பெண்களுக்கும் சரியான வேலை.

துக்கம் பேதமன்னியில் சகலருக்கும் சம்பவிக்கக்கூடியது. அரசர்களும் கண்கலங்கும் காலம் உண்டு. துக்கத்தைக் கொண்டாடுவதென்பது உலகமுழுவதும் பொதுவான வழக்கமாக விருந்துவருகிறது. ஆனால் இறந்துபோனவர்களை படலம், காண்டமாக வர்ணித்து, பலர்கூடி அழுது ஒப்பாரி வைத்துத்துக்கத்தைக் கொண்டாடுவது தமிழ் நாட்டின் ஏகபோக உரிமை.

அழகானவெல்வெட் தலையணையில் அயர்ந்திருக்கும் புதிய நாட்டுப்பெண் தூங்கிக்கொண்டிருக்கட்டும், எல்லோருக்கும் வெற்றிலைப்பாக்கு உபசாரம் செய்யும் குப்பம்மாளுக்கு வேறு என்ன தெரியும்? அழவுந் தெரியாது பேசவுந்தெரியாது. இவ்விதம் இரண்டுங்கெட்ட பெண்களையாரும் சட்டை செய்வது கிடையாது. பலர் புன்னகையுடன் வாழ்நாளை அனுபவிக்க தான் மட்டும் கிழவிக்கும் விதவைகளுக்கும் கீழ்படிந்து ஊழியம் செய்யும் தன் வினையை எண்ணி எண்ணி நொந்து கொண்டிருக்கும் சமயற்காரன் துர்மரணம் அடையாமல் இருப்பானாக! ஒரு மூலையில் இரகசியமாகப் பேசிக்கொண்டிருக்கும் இரு கிழவிகளை கவனிப்போம்.

துக்கம் விசாரிக்க வந்த கிழவி வேணுமுதலியாரின் மனைவியைப் பார்த்து இது என்ன கூத்து. கமலத்தை படிக்கவைக்கப் போகிறீர்களாமே! வீட்டுக் கிழவி—முதலில் அப்படித்தான் முதலியார் சொல்லிக் கொண்டிருந்தார். இவ்விதம் பேசிக்கொண்டு இனி வீட்டிற்குள் வர வேண்டாமென்று கண்டிப்பாய் சொல்லிவிட்டேன். வந்தகிழவி—நல்லகாரியம் செய்தீகள்! வீட்டுக் கிழவி—இம்மாதிரி விஷயங்களில் ஆண்களுக்கு இடங்கொடுத்தால் வீட்டுக்காரியம் ஊர்சிரித்துப்போகும்.

கிழவிகளாதலாலே இருவரும் வயது சென்றவர்கள். அவர்கள் இதுவரையில் எவ்வளவோ பெண்கள் விதவைகளானதைப் பார்த்திருக்கிறார்கள். ஆகையால்சிறு வயதிலேயே கமலம் (வேணுமுதலியாரின் மகள்) விதவையாகி விட்டாலும் அவள் என்றன் ஆயுள் முழுமையும் ஒழுங்காக காலம் கழிக்க முடியாது என்பதே கிழவிகளின் கேள்வி.

ஆகாரமும், காற்றும் உயிருக்கு ஆதாரமாக விருந்தாலும் இரண்டில் மட்டும் ஜீவகோடிகள் நிம்மதியடைவதில்லை. கணவன் இறந்துவிட்டால் பின்னர் மனைவி மரக்கட்டையாக மாறிவிட மாட்டாள். இவ்வாறு இயற்கையை சிறை செய்யும் பழக்கம் “கடவுள் கட்டளை” யாக இந்தியாவில் இன்னும் வழங்கிவருகிறது. மகான்களெனப்படும் சிலர் மூடப் பழக்கங்களை தங்கள் சட்டைப்பைக்குள் வைத்துக்காப்பாற்றி வருகிறார்கள். குருட்டுப்பழக்கத்தை எந்தத் திரை போட்டு மூடினாலும் உண்மைக்குப் பரிந்து பேசுவோர் அதை கண்டனம் செய்தே தீருவர்.

ஃ ஃ

கமலத்தைப்பற்றி அதிகம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. “விதவை” ஒருவார்த்தை போதும் மற்றவைகள் தமிழ் நாட்டாருக்கு வெளிப்படையானது. எனினும் அவள் அழகைப் பற்றியோ! கம்பன் வர்ணிக்கலாம் அல்லது பாரதியார் வர்ணிக்கக் கூடும்.

விதவைகள் அழகாய் இருக்கலாகாதென்பது தமிழ் நாட்டிலுள்ள ஒரு பொதுவான விதி. ஆகாரத்தைக் குறைத்தல், அறைக்குள் அடைத்து வைத்தல், தலையை மொட்டையடிப்பது, நகைகளைக்கழற்றுவது போன்ற குரூரக் கொடுங் கோன்மைகளெல்லாம் மேற்கண்ட விதியை அநுசரித்தே இன்றும் நடந்து வருகிறது.

மாடியில் காந்தவிளக்கின் கீழ் கமலம் நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த கிழவி அவளுடைய அழகையும் காணநேரிட்டது. பெண்ணின் அழகு தாயைச்சுருக்கெனத் தைத்தது. கிழவி கையைப் பிசைந்தாள், பல்லைக் கடித்தாள் கமலத்தின் அழகு குடியைக்கெடுத்து விடுமென்று நடுங்கினாள். (மனிதர்களுடைய தடைகளை மீறியே இயற்கையன்னை தனது ஆட்சியை நடத்துகிறாள்!)

ஃ ஃ

ஆச்சரியம்! அந்த அறையில் தான் கமலம் தன்னை சிங்காரித்துக்கொண்டாள். அந்த இடத்தில் தான் அவள் இன்ப வாழக்கையைப்பற்றிக் கனவு கண்டாள். அதே இடத்தில் அவள் கைதிபோல் அடைபட்டிருக்கிறாள்.

தங்கச் சிலை போன்ற கமலத்தின் உருவத்தைக் கண்ட கண்ணாடிகளெல்லாம் “தனியே கிடந்து வாட வேண்டாம்” என்று கெஞ்சுகின்றன. அதை மறுத்து கமலம் என்ன சொல்ல முடியும்?

---

## நாட்டரசன் கோட்டை பாரதி வாசக சாலை திறப்புவிழா.

---

நாட்டரசன் கோட்டையில் 26—8—32 வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு “பாரதி வாசக சாலை” திறப்புவிழா. நாட்டரசன் கோட்டை யூனியன் போர்டு தலைவர் உயர்திரு மு. செ. வெ. லெட்சுமணஞ்செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அது போது தோழர்கள் சி. த. இராமநாதன், ராமசுப்பையா, எஸ். சொக்கலிங்கம், அ. பொன்னம்பலம், “தமிழ் நாட்டுப்பலவான்” சாண்டோ வெ. சோமசுந்திரம் முதலியவர்களும் உள்ளூர் பிரமுகர்களும் இளைஞர்களும் பெருந்திரளாக விஜயம் செய்திருந்தார்கள். தோழர் சுப. மு. கண்ணப்பா அவர்கள் “பாரதி வாசக சாலை” திறப்புவிழா தலைவரவர்கட்கும், திறப்பாளர் சாண்டோ தோழர் வெ. சோமசுந்திரனாரவர்கட்கும் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்து மலர்மாலை சூட்டினர்.

“தமிழ் நாட்டுப்பலவான்” சாண்டோ, தோழர் வெ. சோமசுந்திரனாரவர்கள் பாரதி வாசக சாலையை அன்புடன் திறந்து வைத்து பாரதியாரின் தேசசேவையைப் பாராட்டி அவரது சமதர்மக் கொள்கை நாட்டு மக்கள் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தி நீண்டதோர் விரிவுரை நிகழ்த்தினர்.

அதன்பின் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் “வாசகசாலையின் பயன்” என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் முடிவுரை கூறியபின்னர் தோழர் சுப. மு. கன்னப்பா அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறினர். சாண்டோ தோழர் வெ. சோமசுந்திரனாரவர்கள் “நசைக்கட்டு காட்டல்” என்ற உடற்பயிற்சியை செய்து காட்டினர். பின் புகைப்படம் எடுக்கப் பெற்று கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

---

இனாம்! இனாம்!!

கிராமபோன்.



ஓட்டோக்களிலெல்லாம் சிறந்தது பாஸ்டாஜ் ஓட்டோதான். மணம் சிறந்தது, வாசனை மிக்கது, மூடியைத்திறந்ததும் பூந்தோட்டத்திலிருப்பதாகவே எண்ணுவீர்கள். எவ்வித மனோ நோயையும் போக்கவல்லதிவ்ய ஔஷதம்.

1 பாட்டல் விலை அணா 8.

6 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு டேபிள் டைம்பீஸ் இனாம்.

12 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு கிராமபோன் இனாம்.

கிராமபோன் ரிகார்டுகள் டஜன் 12 ரூபாயாகும். பாக்கிங் தபால் செலவு வேறு இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள் 1-மாத மட்டுந்தான்.

Universal Stores
Bandagal Salkia
Howrah.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

வரை, ஒவ்வொருவனும் அவ்வனவன் கடமைக்கு கடவுள் துணையைத்தான் வேண்டி காலத்தைக்கழிக்கின்றான். புல் விற்போன், ஒருநாள் தனக்கு வேண்டிய புல் அகப்படா விட்டால் இன்றுநமக்கு ஈசன் கிருபைபுரிய வில்லை, அதனால்தான் நமக்குப்போதிய புல் கிடைக்கவில்லை, இன்றுநாம் கஷ்டப்பட வேண்டியது நமது விதிப்பயன் போலும் என்று எண்ணுகின்றானே யொழிய, நாம் புல்கிடைக்கக்கூடிய இடத்தைத்தேடிச் செல்லவில்லை, நமது தப்பிதத்தினால் தான் நமக்குப் போதிய பலன் கிடைக்கவில்லை, நாளைக்கு மற்றையோர் இடத்திற்குப் போய் பார்க்க வேண்டுமென்று நினைக்கமாட்டேனென்கிறான். இதே மாதிரியே ஒவ்வொரு மனிதனும், தன் வாழ்நாளில் தன் தப்பிதத்தினாலோ அல்லது முயற்சிக்குறைவினாலோ ஏற்படக்கூடிய பலன்களுக்குகெல்லாம்தன்குற்றமென்றுணராது, இது நமது தலைவிதி, இதுதான் நமக்கு ஈசன் கட்டளை, என்னும் மூடநம்பிக்கையில் மூழ்கி மேலும் மேலும் முயற்சிக்காமல் தமக்குக் கடவுள் கடாக்ஷம் வேண்டுமென்னும் எண்ணத்தினால், தன் கடமையைச் செய்யத் தவறி விடுகின்றான்.

மேல் நாட்டார்களோ நம்மைப் போன்று எதையும்-எதற்கும், கடவுள் செயல் கடவுள் துணையென்று காலத்தைக்கழிப்பதே கிடையாது. அவர்கள் நம்மைப்போல் காதையும் மூக்கையும் பொத்திக்கொண்டு, காயத்திரி மந்திரஞ் சொல்லி காட்டுவாசஞ் செய்வதே கிடையாது. அவர்கள் விபூதி பூசினால் மோக்ஷமா; நாமமணிந்தால் மோக்ஷமா! என்று ஆராய்ச்சி செய்வதே கிடையாது. அவர்கள் ஒருநாளில் மூன்றிலிரண்டு பங்கை விபூதி பூசி, ருத்ருக்கமணி பூட்டி, முணுமுணுப்பதில் காலத்தைக் கழிப்பதே கிடையாது. அவர்கள் அவர்களால் செய்யப்படும் எந்தக்காரியத்துக்கும், கடவுள் துணையை விரும்புவதும், எதிர்பார்ப்பதும் கிடையாது. எல்லாம் அவர்களே செய்வதாக, நான் செய்தேன், நான் செய்வேன் என்னும் தன்னம்பிக்கையில் தளரா ஊக்கத்துடன், நினைத்த மாத்திரத்தில் காரியத்தை ஆரம்பித்து செவ்வனே முடித்து, தன் வாழ்நாளைக் கழிக்கின்றார்கள். நாமோ, செய்யவேண்டிய காரியங்களுக்கு நல்ல நாள், நக்ஷத்திரம், ராகுகாலம், குளிகை காலம் பார்த்து காலத்தைப் பாழ்படுத்துகின்றோம். நாம் நமது வாழ்நாளில் எதைச் செய்தாலும், எதை நினைத்தாலும் கடவுளைப்பிணிக்காத, நினைக்காத காரியமே கிடையாது. தோழர் காந்தியார் வேண்டும் இராம ராஜ்யம், இந்தியாவில் உதயமாகுமேல் அக்காலை வெளியாகும் நாணயங்களில் இராமனது உருவந்தான் காணப்படும். அக்காலத்தில் பக்கா வைதிகர்களாகிய சிவாசாரியார்களோ அதைத்தொட்டால், பார்த்தால் பாவம் என்று, தங்கள் தங்கள் பெட்டியிலுள்ள நாணயங்களை ஒரு அன்னிய மதக்காரனை ஏவி, எடுத்துக்கொண்டு போகச்சொல்வார்கள். ஏன்! "இராமன்" என்ற பெயரைக்கேட்ட ஒரு சிவ பக்தனோ, அல்லது "முருகன்" என்ற பெயரைக்கேட்ட ஒரு விஷ்ணு பக்தனோ, ஒருவருக்கொருவர் ஒவ்வொன்று பிடிக்காமல், காதையும், மூக்கையும், கண்ணையும் பொத்திக்கொள்வது தான் இன்றைய நம் நாட்டுக் காட்சியாக விருக்கின்றனவே.

இவ்வாது நாம் எடுத்ததற்கெல்லாம், நினைப்பதற்கெல்லாம் "கடவுள்" "கடவுள்" என்று எல்லாவற்றையும் அந்த வெற்றுரையின் தலையில் சுமத்தி, சோம்பேரிகளாய், சோணகிரிகளாய் இடுவார் கைபார்த்து ஏங்கி நிற்கின்றோம். மேல் நாட்டார்களோ, எடுத்ததற்கெல்லாம் முயற்சி, சிந்தனை, அறிவு, ஆராய்ச்சி இவைகளில் ஈடுபட்டு, காரியத்தில் வெற்றி பெற்று சுகபோகிகளாகவும், சுதந்திரர்களாகவும், சுத்த வீரர்களாகவும் இருக்கின்றார்கள். அப்படியிருந்தும் அந்நாட்டிலுள்ளோர் இற்றைய உலகத்திற்கு கடவுள் நம்பிக்கை கூடவே கூடாது என்று கூறி, அதையொழிக்க கங்கணங்கட்டி ஒழித்தும் வருகின்றார்கள்.

ஏ! சுயமரியாதை இளஞ்சிங்கங்களே! வீணே காட்டுமிராண்டி காலத்தில், அறிவு விளங்காக் காலத்தில், விஞ்ஞான ஒளி பரவாக்காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட, நம்மை மற்ற உலக மக்கள் கூட்டத்தினின்று பிரித்து வைத்திருக்கும். நம்மை முன்னேற வொண்ணுவாறு தடுத்தாட்கொண்டிருக்கும், நம்மை அடிமைகளாக்கி வைத்திருக்கும், நம்மை சோம்பேரிகளாக்கி வைத்திருக்கும், நம்மை தரித்திரக்கடலில் தள்ளிக் கொள்ளை கொடுத்துக்கொண்டிருக்கும், நம் அறிவுக்குத்திரை போட்டுக் கொண்டிருக்கும், "சக்தி" என்னும் ஒரு வெற்றுரையிலும், அதன் பயனாய் வந்த "கடவுள்" என்னும்வெற்றுரையிலும்வீணேமயங்கிஅதற்கென பொருளையும், பொழுதையும், புத்தியையும் சக்தியையும் வீணாக்காது, எல்லாம் நமது செயல், எதையும் நாம் செய்வோம் என்னும் தன்னம்பிக்கையோடு நமது வாழ்நாளைக்கடத்துவோமாயின், அக்காலையில் நாம் தரித்திரப்படவேண்டியதில்லை, ஒருவர் தயவையும் எதிர் பார்க்கவேண்டியதில்லை, ஒருவருக்கும் அடிமையாக இருக்கவேண்டியதில்லை. இதனால் தான் "சுயமரியாதை இயக்கம்" "கடவுளைப்பற்றி கவலைகொள்ளாதே" "கடவுள் என்பது உதவாமொழியே" என்று நமக்குப் போதிக்கின்றன.

---

## பார்ப்பனர் ஜாதி ஆணவம்.

---

### ஆதிதிராவிட பிள்ளைகள் துயரம்.

---

குடவாயிலுக்கு அருகில் உள்ள எல்லையூர் கிராமத்தில் சென்ற 25-8-32 தேதி நடுப்பகல் 2-30 மணிக்கு அவ்வூரிலுள்ள தாலூகா போர்டு பாடசாலைக்கு ஆதிதிராவிடர்களின் மக்கள் நால்வர் சேர்ந்து படிக்கச் சென்றார்கள். அவர்கள் சென்றபோது ஆங்குள்ள பார்ப்பனத்திமிர் நிறைந்த ஐயர் ஒருவர் இங்கு உங்களைச் சேர்க்க முடியாது என்று கூறியதோடு வாயால் வந்தவாறெல்லாம் திட்டி ஒரு குச்சினால் சேர்க்கச் சென்றவர்களையும் வலிய அடித்தார் எனவும் தெரிய வருகிறது. பொது மக்களால் நடத்தப் பெறும் பள்ளிக்கூடங்களிலேயே இத்தகையச் சோம்பேரிச் சுயநலச்சண்டாளர்கள் இருப்பாரெனில் நம் நாட்டில் எவ்வாறு ஆரம்பக்கல்வியும், ஆதிதிராவிட மக்களும் மேன்மையுற முடியும்?

இது குறித்து நன்னிலம் தாலூகா போர்டு தலைவர் அவர்களும், கல்வி இலாக்காத் தலைவர் அவர்களும், தக்க மக்கட்குழைக்க முன்வரும் பார்ப்பனரல்லாத ஆசிரியரை ஏற்படுத்திக் கல்வி விளக்கம் செய்வார்களாக.

"உண்மை உரைப்போன்"

---

### பிரசங்கம்.

27—8—32ல் சனிக்கிழமை கோலார் தங்கவயல்மாடிகுப்பம்தென்னிந்தியா பௌத்த சங்க சபா மண்டபத்தில் உயர் திரு ஜி. அப்பாதுரையார் அவைத்தலைமையின்கீழ்வைசங்க வித்வானும் தமிழ் ஆசிரியரும் திரு ஆ. நா. ஐய்யாகன்னுபுலவரும் திரு. எம். இராமசாமியாரும், திருமதி எம். சொர்ணம்பாளும் பேசியபின் தலைவர் முடிவுரையுடன் மணி 9க்கு கலைந்தது என கௌரவ காரியதரிசி எழுதுகிறார்.

---


## மதனகமம்
(புதுச்சேரிப் பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறுமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறுது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம்
தர்மராஜா கோவில் வீதி,
புதுச்சேரி.


## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

---

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபனாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே.எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்


தபால் படிப்பின் அற்புதம்.

## 1000-மாணவர்கள்.

---

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம்!

தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிகுலேஷன் கோர்ஸ்களைத் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர் ஹையர்கிரேட் உபாத்தியாயர்கள, குமாஸ்தாக்கள், ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப்பிரயோஜனமானது. பிராஸ் பெக்டசுக்கு உடனே ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
ஆறுமுகநேரி S. I. R.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

லேயன்றோ! அவ்வாறு பலவிடங்களில் நடைபெறுவதாகவும் நாமறிகின்றோம். பாவம்! அவர்கள் பிழைப்பில் மண் விழும்படி மக்களுக்கு நல்லறிவு புகட்டி வருபவரையும், வருபவைகளையும் தூற்றிக் கடிதல் இயல்பேயன்றோ! எனினும் அவர்களது வஞ்சகச்சூழ்ச்சியில் மக்கள் மயங்குங் காலம் மலையேறிவிட்டது என்பதையவர்கள் அறியாதது வருந்தத்தக்கதே; இரங்கத்தக்கதே. அண்மையில் அவர்கள் புரட்டு, வெளிப்படுதலும், அதன்பயனை யனுபவித்தலும் உறுதி. அதை நினைக்குந்தோறும், அந்நாளைப்பற்றி எண்ணுந்தோறும், எம்மையறியாததொரு குதூகலம் உண்டாகிறது. அன்று ஏமாற்றுபவருக்குத்திண்டாட்டம் வந்துறுவதியல்பே!

எனவே அவர்களும் சோதரர்கள் என்கின்ற முறையில் அவர்களுக்கும் ஓர் யோசனை கூற விரும்புகிறோம். தோழர்களே! தூங்குபவர் தொடையில் கயிறு திரித்தது சாலும். தூங்குபவன் என்றுமே தூங்கான். விழித்தால் நம் பாடு ஆபத்தாய் முடியும். ஏமாற்றிவிடலாம் என்றாலும், பலரையும் பல காலும் ஏமாற்ற முடியாதென்பதும், பலரும் பல காலும் ஏமாறார்கள், உண்மை விளக்கம் பெற்று, உய்வழி கண்டிடுவர் என்பதும் உலக அநுபவத்தாற் கண்ட உண்மையன்றோ! ஆதலின் நிகழ்வது பகுத்தறிவுக் காலமெனவுணர்ந்து ஏமாற்று, வஞ்சனை, சூதுகளொழித்துக் கண்ணியமான முறையில், பார்த்தனுபவிப்பவர் பலன் பெறும் முறையில் தொழிலிலீடுபடுவீர்களாக. இன்னும் அத்தொழிலிலே இருந்துபேரும், புகழும், செல்வாக்கும், மக்களின் நன்மதிப்பும் நல்லாதரவும் பெற வேண்டுமானால், அத்தகைப் பேறு பன்னெடு நாள் பரந்து மிளிர வேண்டுமானால், நாம் சொல்லியதை உய்த்துணர்ந்து பின்பற்றுவீர்களாக.

நாடகமேடை நலம் பெற இலங்கிடும் நாடகாபிமானிகளுக்கோர் வார்த்தை. நாடகம் பார்த்தல் நமது முற்போக்குக்கான அரிய பல நீதிகளையறிதற்கென்னு முண்மையையுட்கொண்டு அத்தகை நீதிகளை யுய்த்துணர்ந்து பின்பற்றுவதுடன், பிற்போக்குக் கடிகோலும் அயோக்கியக் குழுவினரின் அடாச் செயல்களைக் கண்டித்து, அவர்களுக்கும் அறிவுச்சுடர் கொளுத்த வேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம். அவ்வாறு செய்வதால் அவர்கள் திருந்தி நேரிய முறையில் நடித்து நாடு நலம் பெற விழைதலோடு, நுமது கண்டத்தின் உண்மை கண்ட பாமர மக்களும் நல்வழி நின்று, அவ்வழி நீத்து ஒல்காப் பெரும் புகழோங்கி வாழ்வர்.

உண்மைக்குப் பரிந்துழைத்தலே மானுஷிக லட்சியம் என்றுணர்ந்து, அறியாமையால் அவதிப்படும் பாமரரைத் திருத்தியவர்கள் பகுத்தறிவு பெற்றுத் தன்மதிப்புணர்ச்சி கொண்டு தன்னம்பிக்கையுடன் சீரிய

## 'தாத்தா காந்திக்கு பேரன் வரைவது'

(எஸ். கே. சாமி.)

தாத்தா!

தங்களிடத்தில் எனக்கொரு சந்தேகம். தங்களை இப்பொழுது பொதுவாக இவ்வுலகம் சிறப்பாக இந்தியா, மகாத்மா—அவதார புருடர்—திரிகால ஞானி—அஹிம்சா தர்மி—அன்பே உருவானவர்—தூன் புறப்பொருர் — ஏழைபங்காளன்— ஏர்வாடா விருந்தாளி—என்றெல்லாம் போற்றித்திகழும் பொன்னுரைகள்—புனை உரையோ? புகழுரையோ யான் அறிகிலேன். பத்திரிகைகளில்பார்க்கக் காணக்கிடக்கின்றன.

லண்டன் வட்டமேஜை மகாநாட்டிற்கு சென்றீர். சிறைக்கு பன்முறை சென்றீர். இப்பொழுது சிறையிலிருக்கின்றீர். ஓரிடத்தில் வரிகொடா இயக்கத்தை ஆரம்பித்தீர்; மற்றோரிடத்தில் சட்ட மறுப்பை ஆரம்பித்தீர்; இன்னோரிடத்தில் அந்நியத்துணி சாமான் பகிஷ்காரத்தையும், கள், சாராயக்கடை மறியலையும் ஆரம்பித்தீர் இவைகளுக்கு இரையாக எத்தனையோ எம்போன்ற பேரன்—பேத்திகளையும், குமரன்—குமரிகளையும், காதலன்—காதலிகளையும், கிழவர்—கிழவிகளையும் என்? கருப்பை சிசுக்களையும், எத்தனையோ அடக்குமுறைச்சட்டங்களுக்கு ஆளாக்கினீர் அல்லவா? இது ஹிம்சையா? அஹிம்சையா? கொலையா? சித்திரவதையா? இன்னுமிதுபோன்று எத்தனையோ போரைப்பலிகொடுப்பேனென்று கூவிக்கூவி குருவியாய்ப் பறக்கின்றீரே எதற்கோ? இவைகளில் தாங்கள் அடைந்தது வெற்றியா? தோல்வியா? தோல்வியானால் தங்கள் "சுயராஜ்ய—ராமராஜ்ஜியத்தின்" வழி என்ன? இவ்வளவுதான் தங்கள் திருவிளையாடலா? அல்ல. சோமசுந்தரக்கடவுள் மதுரையம்பதியில் நிகழ்த்திய 64-ம் வருமா? தாங்கள் அவர்தம் அவதாரமல்லவா? இது ஒரு கூட்டத்தாரின் கருத்து. எத்தனை 64 (திருவிளையாடல்) வந்தாலும் அடக்கு முறைச்சட்டங்களுக்குத் தந்தைவில்லிங்டன் பிரபுவின் முன் நிற்குமா? என்பதுதான்எனது—பேரன் சந்தேகம்.

தங்கள் மகாத்மா, திவான் பகதூர், ராவ்பகதூர் பட்டங்களிலல்ல! தாங்கள் பொதுவாக உலகை ஏமாற்றிய இல்லை, இல்லை, சிறப்பாக இந்தியாவை ஏமாற்றிய அதுவும் இல்லை! இல்லை! என்னை—பேரனை ஏமாற்றிய மகாத்மா என்பதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை.

---

வாழ்வு நடாத்தச் செய்தலே நீவிர் நமது நாட்டுக்காற்றும் அருந்தொண்டாகும். அதுவே நமது விடுதலை பயப்பது. நீவிர் என் செய்யப்போகின்றீர்?

## தோழர் அ. பொன்னம்பலம்.

பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் 18—8—32 இரவு திருச்சியிலிருந்து பயணமாகி சிதம்பரம், பரதூர், புதுச்சேரி, மாயவரம், கும்பகோணம் முதலியயிடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு 22—8—32 இரவு காரைக்குடி வந்து சேர்ந்தார்.

காரைக்குடியிலிருந்து தோழர் ராம சுப்பையா அவர்களுடன் நாட்டரசன் கோட்டை, திருமயம், திருச்சி, உறையூர், முதலியயிடங்கட்குச் சென்று விட்டு 30—8—32 ஸ்ரீரெங்கம் வந்து சேர்ந்தார்கள். 31—8—32 ஸ்ரீரெங்கத்தில் நடைபெறும் "விதவாவிவாகத்தில்" கலந்து கொண்டு இரவு காரைக்குடி செல்வார்கள்.

தோழர் அ. பொன்னம்பலம் அவர்கட்கு எழுதப்படும் கடிதங்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

அ. போன்னம்பலம்
முத்துப்பட்டணம்
காரைக்குடி.


Goshaye office pillss.

கோஷாயி
ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர்
T. K. V.
Chalam.

மலசிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாரஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலராபைரி) கோஷாயி வைத்தியசாலை,தென்னூர்,திருச்சி.



ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்

# தங்கபஸ்பம்

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.
48 நாள் பஸ்பம் ரூ. 20.      24 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம்.      புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்- இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது.
புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது.      புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் மலையப்பசாமி,
வைத்தியசாலை, பழனி, S. I.,

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தினங்களுக்கும் உணவின்றியிருக்கலாம். இன்னும் விசேஷப்பழக்கத்தின் மேல் இரண்டொரு வாரம் உயிருடன் உணவின்றியிருக்கலாம். ஆனால் எவரும் மாதக்கணக்கில் உணவின்றி உயிர்வாழ எவராலும் முடியாது. எனவே, இரண்டொரு நாளேனும், இரண்டொரு வாரமேனும் உணவின்றி உயர்வாழ மனிதனால் முடியுமெனினும், அவன் என்றைக்கும் உணவில்லாமலே உயிர் வாழ முடியாதென்பது திண்ணம்.

எனவே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இயற்கையான பசியின் கொடுமையை நிவர்த்தித்துக்கொள்வதற்காகத் தங்கள் உயிருக்குக் கூட இன்ன வேலை தான் ஆபத்தென்பதில்லாமல், எந்த வேலையும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, சுரங்கங்களிலும், இயந்திரசாலைகளிலும் ஆலைகளிலும் பாடுபடுகின்றனர்.

அந்தஸ்து வேற்றுமை நாட்டில் காணப்படுவதைப்பலரும் அறிவர். பாராளும் மன்னர் இராஜ சபைக்குச் செல்கிறார். மந்திரிகளும் கவர்னர்களும் தங்கள் காரியாலயங்களுக்குச் செல்கின்றனர். ஜட்ஜ்களும், வக்கீல்களும் கச்சேரிக்குச் செல்கின்றனர். ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்கின்றனர். வியாபாரிகள் தங்கள் வியாபாரஸ்தலங்கட்குச் செல்கின்றனர். உழவர்கள், ஏர், கலப்பைகளை எடுத்துக்கொண்டு வயல்களுக்குச் செல்கின்றனர். கூலியாட்கள் அரை வயிறு கஞ்சி குடித்து விட்டு ஆலைகளுக்குச் செல்கின்றனர். சிலர் கோடாலியைத் தோளில் மாட்டிக்கொண்டு தெருத்தெருவாயலைந்து விறகுஉடைக்கிறார்கள்; சில கூலியாட்கள் மண்வெட்டியுடன் சென்று சுவர் வைத்துக்கூலி பெருகின்றனர். தோட்டி, கையில் துடைப்பத்துடன் சென்று ஜனங்கள் நடமாடும் ரஸ்தாக்களைக் கூட்டிச் சுத்தம் செய்கிறான்; இன்னும் கக்கூஸ் எடுக்கவும் செய்கிறான்.

இந்த வேலைகளிலெல்லாம் அந்தஸ்துப் பேதமிருப்பது உண்மையே. அதுவும் அவரவர்களின் கல்விக்குத் தகுந்தாற் போன்று உத்தியோகங்கள் வகிப்பதும் உண்மையே. பாராளும் மன்னவனுக்கும், தெருக் கூட்டும் தோட்டிக்குமிடையில் கல்வி பேதமும் அந்தஸ்து பேதமுமிருந்த போதிலும், அம்மன்னனும் இந்தோட்டியும் மனிதர்களோ என்பதில் எவ்வித பேதமுமில்லையே தாய்வயிற்றில் சேய் உற்பத்தி செய்யப்படுவதிலோ, வளர்வதிலோ, பூமியில் பிறப்பதிலோ, இன்பதுன்பங்களை உணர்வதிலோ, அரசனுக்கும் உழவனுக்கும் எவ்வகைப் பேதமுள்ளது? ஒன்றுமில்லையன்றோ? மனிதர்களுக்குரிய இயற்கைத்தன்மையில் அரசனும் உழவனும் எள்ளத்தனை பேதமும் கொண்டிருப்பதில்லை எனவே மனிதர்களுக்குத் தேவையென்னும்படியான இயற்கை நியதிகளிலும் இந்த மன்னனுக்கும் உழவனுக்கும் எவ்வித பேதமுமிருக்க இடமில்லையன்றோ? இதில் மறைபொருள் என்னவிருக்கிறது? ஒன்றுமில்லையே!

பசிக்கொடுமை.

"ஒரு நாளுணவை ஒழியென்றா லொழியாய், இருநாளைக்கேலென்றா லேலாய்; ஒருநாளும் எந்நோவறியாய்; இடும்பைகூர் என்வயிறே! உன்னோடு வாழ்தலரிது" என ஒரு புலவர் பாடினார். இது முற்றிலும் உண்மையென்பதை எவரே மறுப்பர்? இன்னும் "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பதையும் எண்ணுகையில் பசியின் கொடுமை எவ்வளவு பெரியது என்பது நன்கு விளங்கும். பசி வந்தவுடன் மனிதன் எந்த வேலையையும் செய்ய முடிகிறதில்லை. சிம்மாசனத்தமர்ந்து செங்கோல் செலுத்தும் மன்னனும் பசி வந்தவுடன், (பசிவேளை வந்தவுடன்) சாப்பாட்டை நாடிச் செல்கிறார். அஃதே போன்றுதான் ஓர் தோட்டியும் பசி வந்தவுடன், மற்ற எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு வயிற்றுப் பாட்டைப் பார்க்கச் செல்லவேண்டியவனாகிறான். உலகில் மனிதர்கள் எந்த எந்தக்காரியங்களிலெல்லாமோ மறதியுடையவர்களாயிருக்கின்றனர். ஆனால் சாப்பாட்டு விஷயத்தில் "மறந்து பட்டினி" கிடந்தவர்களையும், கிடப்பவர்களையும் நாம் பார்ப்பதில்லை. ஏனெனில், மனிதன் அதிசுவாரஸ்யமாக எந்த வேலை செய்துகொண்டிருந்த போதிலும், அவர்கள் சாப்பாட்டு வேளையை மறந்திருந்த போதிலும், அந்த நேரம் வயிற்றில் ஓர்வித உணர்ச்சி தோன்றி மனிதனின் ஞாபக மனத்தையும் தன் பக்கம் திருப்பிக்கொள்ளுகிறது. அவ்வுணர்ச்சியை நாம் பசி என்கிறோம். இந்தப் பசி ஒரே விதமாக அரசனையும் வருத்துகிறது, உழவனையும் வருத்துகிறது: முதலாளியையும் வருத்துகிறது; தொழிலாளியையும் வருத்துகிறது; செல்வந்தனையும் வருத்துகிறது; ஏழையையும் வருத்துகிறது; ஆணையும் வருத்துகிறது; பெண்ணையும் வருத்துகிறது; சிறுபாலர்களையும் வருத்துகிறது; பெரிய விருத்தர்களையும் வருத்துகிறது. இதில் அந்தஸ்து பேதத்தைக்காணோம். ஏன்? பசி இயற்கை நியதியின் பாற்பட்டது. இயற்கை நியதியிலோ, அந்தஸ்துப் பேதம் கடுகளவும் கிடையாது. இதனை நாம், கடந்த கட்டுரைகளில் நன்கு விளக்கியுள்ளோம்.

இவ்விபரங்களில் உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு ஜீவனுக்கும், அவர்கள் எவ்வகை அந்தஸ்தைப்பெற்றிருந்த போதிலும் பசி என்பதில் எவ்வித அந்தஸ்துப் பேதமுமில்லையென்பதும் கண்டோம். இந்நியதியின்படி நாட்டில் மக்கள் பல திறப்பட்டவர்கள் எந்த பல திறப்பட்ட வேலையைச் செய்பவர்களாயிருந்த போதிலும், எவ்வித அந்தஸ்துடையவர்களாயிருந்த போதிலும், இயற்கையாய் எழும் பசிப்பிணியைத் தீர்த்துக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது என்பதையும் அறிந்தோம். எனவே, மக்கள் ஒவ்வொருவருக்கும், பசிப்பிணியைத் தீர்க்கப் போதிய உணவு இன்றியமையாது வேண்டப்படுவதாகும் என்னும் உண்மை இங்கு தோன்றுவது காண்க. ஆனால்,

இன்றைய நிலைமையில்,

இந்நாட்டு மக்களின் கதி என்னவென்பதில் உங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டுகிறோம். இயற்கைப்படி பசிப்பிணியின் உபாதைக்குட்படத்தக்க பிறவிபெற்றுள்ள மனிதர்கள், இயற்கை நியதியின்படி பசியாற்றப்போதிய உணவு பெருகின்றனரா? அந்தோ! பரிதாபம்! ஒட்டிய கன்னங்களுடனும், உள்ளடங்கிப் பிடரியை நோக்கிப் பிரயாணம் செய்யும் கண்களுடனும், எலும்புந்தோலுமேயன்றித் தசை யென்பதே காணப்படாத தேகத்துடன் எத்தனை லட்சக்கணக்கான மக்கள் தெருக்களில் திரிகின்றனர்? ஒரு வேளைக் கஞ்சி வாயாரப்புசிக்க வழியின்றி எத்தனை லட்சக்கணக்கான மக்கள் சத்திரங்களிலும், கடைத்தெருவுகளிலும் சுற்றியலைந்து எச்சில் பொறுக்கியுண்கின்றனர்! பன்றி நக்கிக்கொண்டிருக்கும் எச்சில் இலையை, நாய் பன்றியுடன் சண்டையிட்டுக்கொண்டு நிற்க, அந்தப் பன்றியையும் நாயையும் ஓட்டிவிட்டு அந்த எச்சில் இலையை எடுத்து நக்கி ஜீவிக்கும் எத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் இந்நாட்டிலிருக்கின்றனர்? "ஐயோ பசி! பசி!! என்னும் கூக்குரல் எங்கும் கிளம்பிக் காதைச் செவிடுபடச் செய்வது என்? ஆ! அந்தோ! இவையனைத்தும் பசியின் காரணமன்றோ?

அரிசி வாங்கக்கையிலோ காசு கிடையாது; கடன் கொடுப்பவரோ எவரும் கிடையாது; தெருத்தெரு வாய் நாய் போல் திரியினும் வேலை கிடைப்பதில்லை. இதே சமயத்தில் பாழும் பசியின் கொடுமை யோசிக்கத்தக்கதாயில்லை இந்நிலையிலுள்ள மக்கள் லட்சக்கணக்கில், என், கோடிக்கணக்கில் இந்நாட்டிலிருப்பார்களானால் அவர்களின் கதிதானென்னவென்று சகோதரர்களே! சற்று சிந்தித்துப்பாருங்கள்.

---


# ஸ்ரீராமவிலாஸ்குரிசிட் பண்ட் கொல்லம்.

## முக்கிய அறிவிப்பு.

சென்ற மே மாதத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு குறுகிய கால அளவில் நல்ல பயனளிக்கும் வேலை செய்துவரும் ஸ்ரீராமவிலாஸ் குரிச்சிட்பண்ட் அபிமானிகளும், ஏஜண்டுகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நம்மிடமிருந்து டிக்கட்டுகளும், டிக்கட்புஸ்தகங்களும் பெற்றுக்கொண்டவர்களுக்கு இதனால் தெரிவித்துக்கொள்வதென்னவென்றால்:—

முதல் சீட்டெடுக்கும் தேதி 1932-௵ டிசம்பர்-௴ 26-தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கவுண்ட்டர் பாயில்களும் டிக்கட்டுகளின் விற்பனைத்தொகையும்டிசம்பர் மாதம் 15 தேதிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

தவிர எக்காரணம் கொண்டும் வேறுதேதிக்குஒத்திவைக்கப்படமாட்டாதென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்ற விபரங்களறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பினால் பதில் தெரிவிக்கப்படும்.

குறிப்பு:—எல்லாக்கடிதங்களும் இங்லீஷில் தெளிவாய் எழுதப்படவேண்டும். டிக்கட்டுகள் ரொக்கத்திற்கு கொல்லம் பேங்க் லிமிடெட்டின் எல்லாகிளைகளிலும் கிடைக்கும். கடிதங்கள் கீழ்கண்ட விலாசத்திற்கே எழுதியனுப்பப்படவேண்டும்.

The Sri Rama Vilas
Kuri Chit Fund
Quilon.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 7. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—
வெளிநாடு „ 4—0—0

ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0

ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
„ வெளிநாடு 1—8—0.

மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

---

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

---

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

---

## அபான வெடி அல்லது வாய்வு பேதி.

இதனை சாப்பிட்ட சில நேரத்திற்குள் தேகத்திலுள்ள தச வாயுவின் மிகுதியை அபானத்தின் வழியே போக்கிவிடும். சிலருக்கு 1 வேளை மருந்தில் 40—50 தடவை வரை காத்து பரிகிறது. வாதம், வாய்வு உபாதை உடனே தீரும். புட்டி 1க்கு ரூ. 1.

1. "தங்கரசம்" சகலவியாதிகளைப் போக்கும்; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 2. "St. ஜேவியர் சால்ட்" சுக பேதி சர்வரோக சங்காரி; புட்டி 1க்கு ரூ. 1-4-0. 3. "சந்தனுதித் தைலம்" நல்ல குளிர்ச்சியை தரவல்லது; புட்டி 1க்கு ரூ. 1-0-0. 4. "G. L. கல்நார் பற்பொடி" தந்த வியாதிகளுக்கு சஞ்சீவி; டஜன் 1க்கு ரூ. 1-8-0, பெரியது ரூ. 3-0-0.

கமிஷன் ஏஜெண்டுகள் தேவை. கேட்லாக் இனும்.

டாக்டர் ஜி. எல். சாமி,
வரகனேரி, திருச்சினுப்பள்ளி.

---

## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.